இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 218 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 06 – செவ்வாய்க்கிழமை 19 மார்ச் 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 218 : Thiruvalluvar Year - 2055 - Panguni 06 - Tuesday 19 March 2024 - Dak 8 Pages ₹ 5.00




மும்பை – சிவாஜி பூங்காவில் – நேற்று முன்தினம் (17.3.2024) மாலை, நடைபெற்ற – அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் ‘இந்திய ஒற்றுமை நியாயப் பயண’ நிறைவு விழாக் காட்சி இது! **கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்** மற்றும் இந்தியத் திருநாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற அகண்ட மேடை! “ அனைவரும் ஒன்றிணைந்து இந்தியாவைக் காப்போம்” எனத் தலைவர்கள் சூளுரைத்த எழுச்சி மிக்க காட்சியைக் காணலாம்!

## பா.ஜ.க.வை விட இந்திய நாட்டுக்கு வேறு ஆபத்து எதுவும் இல்லை!

# அனைவரும் ஒன்றிணைந்து இந்தியாவைக் காப்பாற்றுவோம்!

## மும்பை - சிவாஜி பூங்காவில் லட்சோப லட்சம் பேர் திரண்ட மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!

மும்பை, மார்ச் 19–

**மும்பை – சிவாஜி பூங்காவில், நேற்று முன்தினம் (17.3.2024) மாலை நடைபெற்ற ‘இந்திய ஒற்றுமை நியாயப் பயணத்தின்’ நிறைவு விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி அவர்களின் இப்பயணத்தைப் பாராட்டி இலட்சோபலட்சம் பேர் மத்தியில் உரை நிகழ்த்திய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ”பா.ஜ.க.வை விட இந்திய நாட்டுக்கு வேறு ஆபத்து எதுவும் இல்லை என்றும், ”அனைவரும் ஒன்றிணைந்து இந்தியாவைக் காபாற்றுவோம்! என்றும் அறைகூவல் விடுத்தார்.**

மும்பையில் நேற்று முன்தினம் (17.3.2024), நடைபெற்ற ராகுல் காந்தி அவர்களின், ‘இந்திய ஒற்றுமை நியாயப் பயண நிகழ்வில்’ கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் வருமாறு :

எனது அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கு எனது வாழ்த்துகளைக் கூறுவதற்காக இங்கு நான் வந்திருக்கிறேன்.

கன்னியாகுமரியில் அவரது இந்திய ஒற்றுமைப் பயணத்தைத் தொடங்கி வைத்த பெருமிதத்துடன் இங்கு நிற்கிறேன். உங்கள் பயணம் இன்று மும்பையை அடைந்துள்ளது. விரைவில் அது டெல்லியை எட்டும்! ‘இந்தியா’ கூட்டணி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்கும்.

### இன்னல்கள் கண்டும் இடராத ராகுலின் பயணம்!

ராகுல் காந்தி அவர்கள் எங்கு சென்றாலும் பெரும் திருவிழாவைப் போல அந்த இடம் காட்சியளிக்கிறது. அப்படியொரு வரவேற்பையும் அன்பையும் மக்கள் அவர் மீது பொழிகிறார்கள். இந்தப் பயணத்தினிடையே அவர் பல இடர்களைப் பா.ஜ.க. அரசின் மூலம் எதிர்கொண்டார். அவரது பயணத்துக்கு அனுமதி மறுக்க என்னென்னவோ காரணங்களைச் சொல்லிப் பார்த்தார்கள். தடைகளை மீறி ராகுல் காந்தி அவர்கள் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.



**‘இந்திய ஒற்றுமை நியாயப் பயணத்தின்’ நாயகர் – ராகுல் காந்தி அவர்களை ஆரத்தழுவி அவருக்குப் பொன்னாடை அணிவித்து புத்தகம் அன்பளிப்பாக வழங்கி, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திய காட்சி!**

### இந்தியாவுக்கான பயணம் இது!

சகோதரர் ராகுல் காந்திக்குக் கூடிய மக்கள் பெருந்திரள் பா.ஜ.க.வைத் தூக்கமிழக்கச் செய்தது. அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்தார்கள். ஆனால் அவர் உச்சநீதி மன்றம் வரை சென்று வென்றார். மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து முழங்கினார்.

இந்தப் பயணம் ராகுல் காந்தி என்ற தனிமனிதரின் பயணம் இல்லை. இது இந்தியாவுக்கான பயணம். அதனால்தான் இது, ‘இந்திய ஒற்றுமை நியாயப் பயணம்’. (Bharat Jodo Nyay Yatra)

இ ந் தி யா வு க் கு இப்போது தேவை ஒற்றுமைதான். மக்களைப் பிளவுபடுத்தும் பா.ஜ.க. விரைவில் வீட்டுக்கு அனுப்பப்படும். கடந்த பத்தாண்டுகளில் மோடி செய்தது இரண்டே இரண்டுதான். ஒன்று, வெளிநாட்டுப் பயணங்கள் – மற்றொன்று பொய்ப் பிரசாரம்.

### ஊழலில் ஊறிய கட்சி பா.ஜ.க.!

பா.ஜ.க.வை நாம் இப்போதே நிறுத்தி ஆகவேண்டும். அதுதான் நம் இலக்கு! இந்தியா கூட்டணியை நாம் உருவாக்கிய நாளில் இருந்து, ‘இந்தியா’ என்ற சொல்லையே பா.ஜ.க. தவிர்க்கத் தொடங்கிவிட்டது. அந்த அளவுக்கு அச்சத்தில் இருக்கிறார்கள். அதனால்தான் பிரதமர் மோடி நம் கூட்டணி குறித்து அவதூறு செய்து வருகிறார். ‘இந்தியா’ கூட்டணி ஊழல் கூட்டணி என்கிறார். ஆனால், ஊழலில் ஊறிய கட்சி பா.ஜ.க.தான் என்பதைத் தேர்தல் பத்திர ஊழல் அம்பலப்படுத்தி விட்டது.

> **சகோதரர் ராகுல் காந்திக்குக் கூடிய மக்கள் பெருந்திரள் பா.ஜ.க.வைத் தூக்கமிழக்கச் செய்தது. அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்தார்கள். ஆனால் அவர் உச்சநீதிமன்றம் வரை சென்று வென்றார். மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து முழங்கினார்.**
>
> **இந்தப் பயணம் ராகுல் காந்தி என்ற தனிமனிதரின் பயணம் இல்லை. இது இந்தியாவுக்கான பயணம். அதனால்தான் இது, ‘இந்திய ஒற்றுமை நியாயப் பயணம்’.**

### நவீன ஊழல் புரியும் பிரதமர், ஊழல் பற்றிப் பேசலாமா?

8,000 கோடி ரூபாயைத் தேர்தல் பத்திரங்கள் மூலம் திரட்டியது யார்? இது பா.ஜ.க.வின் நவீன ஊழல்! இப்படிப்பட்ட பிரதமர் ஊழல் குறித்து வாய்திறக்கலாமா? தனது தோல்விகளையும் ஊழல்களையும் திசைதிருப்பவே நம் மீது மோடி குற்றம்சாட்டுகிறார்.

நாம் மக்களுக்கு நன்மை செய்ய அரசியலுக்கு வந்தவர்கள். கேளிக்கைக்காக அன்று! இந்தியாவின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள நாட்டின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் சகோதரர் ராகுல் காந்தி பயணித்திருக்கிறார். பா.ஜ.க.வால் சீரழிக்கப்பட்ட நம் இந்தியாவை மீட்பதற்கான பயணம் இது.

**தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டு விட்டன. இனி பா.ஜ.க.வை வீழ்த்துவது ஒன்றே நமது இலக்கு. பா.ஜ.க.வை விடப் பெரிய ஆபத்து இந்தியாவுக்கு வேறு இல்லை. அவர்களிடம் இருந்து இந்தியாவைக் காப்பாற்ற நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.**

**ராகுல் காந்தி அவர்களின் இந்திய ஒற்றுமை நியாயப் பயணத்தின் உண்மையான வெற்றி என்பது பா.ஜ.க.வை வீழ்த்துவதில்தான் அடங்கியிருக்கிறது.**

### இந்தியாவே எழுக!

கன்னியாகுமரியில் தொடங்கிய இந்தப் பயணம் டெல்லியைக் கைப்பற்றி, அனைத்துத் தரப்பினருக்குமான, மதச்சார்பற்ற, உண்மையான கூட்டாட்சி அரசை அமைப்பதில் நிறைவுற வேண்டும்.

இந்தியாவைக் காப்பாற்ற உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்! இந்தியாவே எழுக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### பொன்முடிக்கு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுக்கும்

## ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு!

புதுடெல்லி, மார்ச் 19 –

உயர்கல்வித் துறை அமைச்சராக இருந்த பொன்முடிக்கு எதிரான சொத்து வழக்கில், உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டது. இதன்மூலம், அவர் திருக்கோவிலூர் எம்.எல்.ஏ.வாக தொடர்வதாக அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொன்முடியை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துவைக்குமாறு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிந்துரை செய்தார். முதலமைச்சர் பரிந்துரை கடிதம் எழுதிய மறுநாள் ஆளுநர் டெல்லி புறப்பட்டுச் சென்றார். ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட பணிகள் காரணமாக அவர் டெல்லிச் சென்றதாக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்தது. நேற்று முன்தினம் சென்னை திரும்பிய ஆளுநர், முதலமைச்சரின் பரிந்துரையை ஏற்க மறுத்து கடிதம் அனுப்பினார்.

இந்நிலையில், பொன்முடிக்கு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுக்கும் ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது. ஆளுநரின் செயல் அரசியல் சாசன பிரிவு 164க்கு எதிரானது என்றும், ஆளுநர் தனியாக ஒரு அரசை நடத்த முயற்சிப்பதாகவும் தமிழ்நாடு அரசின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என தலைமை நீதிபதி அமர்வில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் முறையீடு செய்தனர்.

அப்போது, இந்த மனுவை மின்னஞ்சல் செய்யுமாறு கூறிய தலைமை நீதிபதி, இதனை விரைந்து விசாரிப்பது குறித்து பரிசீலிப்பதாகத் தெரிவித்தார்.

---

### தேர்தல் பத்திர வழக்கில் - 21ஆம் தேதிக்குள் முழு விபரங்களும் தர வேண்டும்!

## எஸ்.பி.ஐ. செயல்பாடு நேர்மையாக இல்லை!

### உச்சநீதிமன்றம் அதிருப்தி! சரமாரி கேள்வி!

*புதுடெல்லி, மார்ச் 19-*

*தேர்தல் பத்திர வழக்கில் எஸ்.பி.ஐ. செயல்பாடு நேர்மையாக இல்லை என உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.*

*தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கும் திட்டத்தை ஒன்றிய பா.ஜ. அரசு கடந்த 2018ல் அறிமுகம் செய்தது. கருப்பு பணத்தை ஒழிக்க உதவும் என்ற முழக்கத்தோடு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், ஒரு கட்சிக்கு யார், யார்? நிதி கொடுத்தார்கள் என்ற விவரம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.*

*ஆளும் பா.ஜ. பெரிய தொழில் நிறுவனங்களை மிரட்டி தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி வசூலிப்பதாக புகார்கள் எழுந்தது. இதனால் தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற அரசியல் சாசன பெஞ்ச், தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்ததோடு, இதுவரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நிதி குறித்த முழு விவரத்தையும் மார்ச் 6ம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க எஸ்.பி.ஐ. வங்கிக்கு உத்தரவிட்டது.*

*ஆனால், பல தரவுகளை சேகரிக்க வேண்டி இருப்பதால் ஜூன் மாதம் வரை கால அவகாசம் கேட்டு உச்ச நீதிமன்றத்தில் எஸ்.பி.ஐ மீண்டும் முறையிட்டது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த உச்ச நீதிமன்றம், கடந்த 12ம் தேதி தன்னிடம் உள்ள தரவுகளை தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. வழங்க வேண்டும். 15ம் தேதிக்குள் அந்த விவரங்கள் தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.*

*இதையடுத்து, எஸ்.பி.ஐ வழங்கிய 763 பக்க ஆவண தரவுகளை தேர்தல் ஆணையம் கடந்த 13ம் தேதி இணைய தளத்தில் வெளியிட்டது.*

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 19-03-2024

# இலங்கையைக் காக்கும் இந்தியப் பிரதமர்

ஓட்டத் தெரியாமல் வண்டியை ஓட்டி மோதியவரிடம் காரணம் கேட்டதும், 'தெரு கோணலாக இருக்கிறது' என்றாராம். அவருக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. அவரது ஆட்சியைப் பற்றி எந்தக் குறையைச் சொன்னாலும், 'பிரதமர் நேருதான் இதற்கு காரணம்' என்பார். நேருவா இப்போது பிரதமர்? எந்தக் குறையைச் சொன்னாலும் காங்கிரஸ்தான் காரணம் என்பார். காங்கிரசா ஆட்சியில் இருக்கிறது?

கன்னியாகுமரிக்கு வந்த பிரதமர், 'இலங்கை நாட்டால் இந்திய மீனவர்கள் கடத்தப்படுவதற்கு தி.மு.க.வும் காங்கிரசும்தான் காரணம்' என்று சொல்லி இருக்கிறார். தி.மு.க.வும் காங்கிரசும் இந்தியாவிலும் ஆட்சியில் இல்லை. இலங்கையிலும் ஆட்சியில் இல்லை.

"தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் தமிழ் மக்களின் உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் தமிழ் மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களை காப்பாற்றி நான் அழைத்து வந்துவிட்டேன். மீனவர்கள் எதற்காக இலங்கை எல்லைப் பகுதிக்கு போக வேண்டும். இது யார் செய்த குற்றம்? யார் செய்த தவறுக்காக அவர்கள் சிறைப்பிடிக்கப்படுகிறார்கள். தி.மு.க.வும் காங்கிரசும் சேர்ந்து செய்த குற்றம்தான் இதற்குக் காரணம்" - என்று பேசி இருக்கிறார் பிரதமர்.

என்ன பேசுகிறார் பிரதமர்? தான் பேசும் கருத்துக்கு பொருள் புரிந்துதான் பேசுகிறாரா? அல்லது பா.ஜ.க.வின் வாட்ஸ் அப் யுனிவர்சிட்டியில் தயாரிக்கப்படுவதை வாசிக்கிறாரா?

**இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகும் இந்திய மீனவர்களை காக்கும் பொறுப்பும் கடமையும் இந்தியாவின் பிரதமருக்கு, இந்திய அரசுக்குத்தான் உண்டு. அதைச் செய்வதற்கு யோக்கியமற்று, தி.மு.க. - காங்கிரசை குறைச் சொல்வதற்கு வெட்கமாக இல்லையா?**

**கன்னியாகுமரியில் பிரதமர் பேசியது மார்ச் 15 ஆம் தேதி. மார்ச் 17 ஆம் தேதி 21 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது. ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் இவர்கள். பிப்ரவரி 4 ஆம் தேதி 23 பேரைக் கைது செய்தார்கள். பிப்ரவரி 8 ஆம் தேதி 17 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். சனவரி 15 அன்று 32 பேர் கைது செய்யப்பட்டார்கள்.**

**மோடி அரசாண்ட பத்தாண்டு காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் 3 ஆயிரத்து 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களின் 534 படகுகள் சிங்கள அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

2023 ஆம் ஆண்டு என்பது தமிழக மீனவர்களுக்கு மிக மோசமான ஆண்டு ஆகும். அந்த ஆண்டு மட்டும், இலங்கைக் கடற்படையினர் 243 மீனவர்களைக் கைது செய்துள்ளார்கள். 37 படகுகளை பறிமுதல் செய்துள்ளார்கள்.

ஏன் தைரியமாக கைது செய்கிறது இலங்கைக் கடற்படை? இந்தியப் பிரதமர் மீது பயமில்லை. அதனால்தான். இலங்கை அரசாங்கத்துக்கு பல்லாயிரம் கோடி பணம் கொடுத்துள்ளதே பா.ஜ.க. அரசு? அந்தளவுக்கு நட்பு பாராட்டும் பா.ஜ.க. அரசு, 'தமிழ் மீனவரைக் கைது செய்யாதே' என்று சொல்வதற்கு ஏன் வலிக்கிறதா?

தனது பதவி ஏற்பு விழாவுக்கு தமிழ்நாட்டின் எதிர்ப்பை மீறி ராஜபக்சேவை அழைத்தவர் தானே, இன்று நீலிக்கண்ணீர் வடிக்கும் மோடி?

அகதிகளாக யார் வேண்டுமானாலும் வரலாம், 'இலங்கைத் தமிழர் வந்தால் ஏற்க மாட்டோம்' என்று ராஜபக்ஷேவுக்கு நோகாத வகையில் சட்டம் போட்டவர் தானே நரேந்திர மோடி?

**"இலங்கையால் தமிழ்நாட்டு மீனவர்க்கு பிரச்சினை. பாகிஸ்தானால் குஜராத் மீனவர்க்கு பிரச்சினை. இரண்டையும் தீர்க்க கூட்டு முயற்சியை மேற்கொள்வேன்" என்றும் பிரதமர் வேட்பாளராக இருந்த போது மோடி சொன்னார். பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு முறை ஆண்டு விட்டார். கூட்டு முயற்சி மட்டுமல்ல, எந்த முயற்சியும் இல்லை. மீனவர்கள் கைது தொடரவே செய்கிறது.**

யாரையோ காப்பாற்றிவிட்டதாக மார் தட்டிக் கொள்கிறாரே? "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட உயிரிழக்க மாட்டார்" என்றாரே பத்தாண்டுகளுக்கு முன் மோடி?

2017 ஆம் ஆண்டு தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப் பட்டதற்கு யார் காரணம்?

2021 ஆம் ஆண்டு - மேசியா நாகராஜன், செந்தில்குமார், சாம்சன், டார்வின் ஆகிய நான்கு மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டார்களே! அதற்கு பொறுப்பேற்க வேண்டியது யார்? இதைத் தடுத்திருக்க வேண்டாமா?

முன்பெல்லாம் கைது செய்யப்படும் மீனவர்கள், பதினைந்து நாளில் விடுதலை ஆகி வந்துவிடுவார்கள். ஆனால் இப்போது சட்டத்தை கடுமையாக்கி விட்டது இலங்கை அரசு. விசைப்படகை இயக்கும் மீனவர்க்கு ஆறு மாதம் சிறையும், இரண்டாவது முறையும் கைதானால் ஓராண்டு சிறையும் விதிக்கப்படுகிறது. விசைப்படகை மீட்பதே அதிக சிரமமாக உள்ளது. 2014 முதல் 2019 முதல் சிறைப்பிடிக்கப்பட்ட 135 படகுகளில் 25 படகுகள் மட்டும் தான் மீட்கப்பட்டன. மீனவர்களது வாழ்வாதாரமே இந்த படகுகள் தான். அதுவே பறிபோய்விடுகின்றன.

இந்தக் கடுமையான சட்டங்கள் 2018ஆம் ஆண்டு தான் கொண்டு வரப்பட்டன இலங்கை அரசால். இதுதான் மீனவர்கள் கைதுக்கு அடிப்படை காரணம். இதைக் கண்டிக்கும் தைரியம் இல்லாத பிரதமர், தி.மு.க. - காங்கிரசை குறை சொல்வது தப்பித்தல் வாதம் ஆகும்.

**தனது நண்பர் அதானிக்காக, இலங்கை அரசாங்கத்தை பிரதமர் மோடியால் குற்றம் சொல்ல முடியவில்லை. அதானிக்காக இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றுகிறார் பிரதமர் மோடி. அதானியின் காற்றாலைத் திட்டம், சுற்றுச்சூழல் பிரச்சினையில் இலங்கையில் சிக்கி உள்ளது. இந்திய மதிப்பில் ரூ.3,650 கோடி முதலீடு செய்யப்படுகிறது. துறைமுகம், விமான நிலையங்கள் அவர்கள் கைக்குப் போகிறது. இலங்கை பத்திரிகைகள் இது பற்றி பக்கம் பக்கமாக எழுதி வருகின்றன. எனவே, இலங்கை அரசாங்கத்தை மோடியால் விமர்சிக்க முடியாது.**

அந்த வகையில் மீனவர்களை கடத்தி சிறைபிடிக்கும் இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றவே கன்னியாகுமரியில் இப்படி பேசி இருக்கிறார் மோடி. 'இந்திய மீனவர்களுக்காக பேசுங்கள்' என்பதுதான் மோடிக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள்!

●●

கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில்

## புறநகர் ரயில் சேவையில் மாற்றம்! தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, மார்ச் 19 –

பொன்னேரி – மீஞ்சூர் இடையே பராமரிப்பு பணிகள் காரணமாக கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் புறநகர் ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. இன்று காலை 9.25 மணி முதல் பிற்பகல் 11.40 மணி வரை பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் 6 ரயில்கள் பகுதி அளவு ரத்து செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னையில் இருந்து புறப்படும் புறநகர் ரயில், மீஞ்சூர் வரை மட்டுமே இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை கடற்கரையில் இருந்து காலை 9.40 மணிக்கு புறப்படும் ரயில் எண்ணூர் வரை மட்டுமே இயக்கப் படும். மறுமார்க்கத்தில் சென்னை வரும் புறநகர் ரயில் கும்மிடிப்பூண்டிக்கு பதில் மீஞ்சூரில் காலை 9.55 மணிக்கு புறப்படும்.

கும்மிடிப்பூண்டிக்கு பதில் எண்ணூரில் இருந்து காலை 10.55 மணிக்கு புறநகர் ரயில் கடற்கரைக்குப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியின் சமூக வலைதளச் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல்படி, தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலஹாசன் ஆகியோரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

எவ்விதச் சலுகைகளையும் யாருக்கும் காட்டாமல், பெறப்பட்ட தேர்தல் நிதியை வெளிப்படைத்தன்மையுடன் வெளியிட்டிருக்கிறோம்! ஆனால், மிரட்டி

# தேர்தல் பத்திரங்களைப் பெற்று அம்பலப்பட்டுள்ள பா.ஜ.க. பற்றி அறிக்கைவிட பழனிசாமிக்கு முதுகெலும்புண்டா?

## கழகப் பொருளாளர் – நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அறிக்கை!

**சென்னை, மார்ச் 19 -**

**கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள், நேற்று முன்தினம் (17.3.2024) விடுத்த அறிக்கையில், "நாங்கள் எவ்விதச் சலுகைகளையும் யாருக்கும் காட்டாமல், பெறப்பட்ட தேர்தல் நிதியை வெளிப்படைத்தன்மையுடன் வெளியிட்டிருக்கிறோம்" என்றும், "தேர்தல் பத்திரங்களைப் பெற்று அம்பலப்பட்டுள்ள பா.ஜ.க. பற்றி அறிக்கைவிட பழனிசாமிக்கு முதுகெலும்புண்டா?" என்றும் குறிப்பிட்டுள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு :-

"யோக்கியன் வர்றான், சொம்பை எடுத்து உள்ளே வை" என்று சொல்வார்களே, அப்படி ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

தான் வகித்த பொதுப்பணித்துறையில் ஒப்பந்தங்களை மொத்தமாகத் தனது சம்பந்திக்கும், அவர் வழி உறவினர்களுக்கும் கொடுத்துச் சிக்கிக் கொண்டவர் பழனிசாமி. குட்கா விற்பனையாளர்களிடம் மாமூல் வசூலிப்பதற்காகத் தனியாக ஒரு அமைச்சரை வைத்திருந்தவர் பழனிசாமி. சிபிஐ நீதிமன்றத்தில் வழக்கு இன்னமும் நடந்து கொண்டு இருக்கிறது. வருமான வரித்துறையினர் இவரது ஆட்சிக் காலத்தில் தலைமைச் செயலாளர் அறையிலேயே சோதனை செய்தார்கள். டி.ஜி.பி.யே சிபிஐ விசாரணையில் சிக்கினார். தூத்துக்குடியில் 13 பேரைச் சுட்டுக் கொன்றது தொடர்பான விசாரணை ஆணையத்தில், 'முதலமைச்சரிடம் சொல்லி விட்டுதான் சுட்டோம்' என்று குற்றம் சாட்டப்பட்டவர் பழனிசாமி.

**'நீண்டதொரு குற்றப்பட்டியல் கொண்ட பழனிசாமி'**

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் சிக்கியவர்களைக் காப்பாற்றியவர் பழனிசாமி. கொடநாடு கொலை, கொள்ளையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளே பழனிசாமி பெயரை வெளியில் சொன்னார்கள். இப்படிப்பட்ட நீண்டதொரு 'குற்றப் பட்டியல்' கொண்ட பழனிசாமி, இன்று விடுத்த அறிக்கையில், பாவத்தைப் பற்றியெல்லாம் பாலபாடம் எடுத்துள்ளார்.

மண்புழுவைப் போல ஊர்ந்து போய் நாற்காலியைக் கைப்பற்றி, துரோகக் குணத்தால் நம்பிக்கைத் துரோகம் செய்து, பின்னர் பா.ஜ.க.வின் பாதம் தாங்கி, அதனைத் தக்க வைத்து, இன்று பா.ஜ.க. அமைத்துக் கொடுத்த திருட்டு வழியில் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பழனிசாமிக்கு, பாவத்தைப் பற்றி எல்லாம் பேசுவதற்கு யோக்கியதை உண்டா?

தி.மு.க. சார்பில் யாரிடம் நன்கொடை பெற்றோமோ, அதனை வெளிப்படைத்தன்மையுடன் தேர்தல் ஆணையத்துக்குத் தெரிவித்துள்ளோம். இதில் மறைப்பதற்கு ஏதுமில்லை. ஒரு நிறுவனத்தைக் குறிப்பிட்டு, அவர்களிடம் பணம் பெற்றது நியாயமா என்று கேட்டுள்ளார் பழனிசாமி. அதற்காக அந்த நிறுவனத்துக்கு எந்தச் சலுகையும் கழக ஆட்சியில் தரப்படவில்லை. ஆன்லைன் சூதாட்டத் தடைச் சட்டத்தைப் போராடிக் கொண்டுவந்து நிறைவேற்றியது கழக அரசுதான்.

**ஆளுநரைக் கண்டித்தாரா?**

பழனிசாமி ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ஆன்லைன் தடைச் சட்டம் செல்லாது, அது சட்டப்பூர்வமானதாக இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் சொன்னபோது, சட்டப்பூர்வமான ஒரு சட்டத்தை உருவாக்கியது கழக அரசுதான். அந்தச் சட்டத்துக்கு அனுமதி வழங்காமல் தாமதித்து வந்தார் ஆளுநர் ரவி. அவர் அதனைத் திருப்பி அனுப்பினார். மீண்டும் நிறைவேற்றி அனுப்பினோம். ஒப்புதலைப் பெற்றோம். ஆன்லைன் வர்த்தக நிறுவனங்களை நடத்துபவர்களைச் சந்தித்து பேசினார் ஆளுநர். அப்போது ஆளுநரைக் கண்டித்தாரா இந்த யோக்கியவான் பழனிசாமி?

இப்போது ஏன் அறிக்கை வெளியிடுகிறார் பழனிசாமி?

தனது எஜமானர்களான பா.ஜ.க.வைக் காப்பற்றுவதற்காக அறிக்கை விடுகிறார்!

அமலாக்கத்துறையை வைத்து மிரட்டி, நிறுவனங்களிடம் தேர்தல் பத்திரங்கள் மூலமாகப் பணத்தைப் பறித்துள்ளது பா.ஜ.க. பா.ஜ.க.வால் மிரட்டப்பட்ட 30 நிறுவனங்களில் 14 நிறுவனங்கள் அதிகளவு பணத்தை பாஜகவுக்கு வாரி வழங்கி உள்ளன. இதன் மூலமாக, 'மிரட்டிப் பணம் பறிக்கும் பா.ஜ.க.' என்று அகில இந்திய அளவில் பா.ஜ.க. அம்பலப்பட்டுள்ளது. பாஜகவால் இதற்கு எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. இத்தகைய பா.ஜ.க. பற்றி பழனிசாமி ஏதாவது கண்டித்துள்ளாரா?

**டெண்டர் மோசடி!**

'பாஜகவுடன் கூட்டணியே கிடையாது' என்று சொல்லும் பழனிசாமிக்கு, பாஜகவின் மிரட்டிப் பணம் பறிக்கும் மோசடித்தனத்தைக் கண்டித்து அறிக்கை விட முதுகெலும்பு உண்டா? ஏன் வாயை மூடிக் கொள்கிறார்? நாங்கள் யாரையும் மிரட்டியோ, ரெய்டு நடத்தியோ பணம் வசூலிக்கவில்லை என்பதை 'டெண்டர் மோசடி' பழனிசாமிக்கு நினைவூட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்களாம்! பழனிசாமி சொல்கிறார். அவர் கைக்கு அதிமுக எப்போது வந்ததோ அது முதல் அந்தக் கட்சி அதலபாதாளத்தில் போய்க் கொண்டு இருக்கிறது. நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் தோற்று முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருப்பவர் அவர்தான். சொரணையற்ற பழனிசாமிக்கு எத்தனை தடவைதான் மக்கள் பாடம் புகட்டுவார்கள்?

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை விடுத்துள்ளார்.

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - க.திருநாவுக்கரசு பங்கேற்பு:

# முனைவர் துரை. சந்திரசேகரன் எழுதிய நூல்கள் - நிலவு பூ.கணேசன் நூற்றாண்டு மலர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிடுகிறார்!

*சென்னை, மார்ச் 19 -*

*முனைவர் துரை.சந்திரசேகரன் எழுதிய மனித உரிமைக்காவலர் தந்தை பெரியார் THe Human Rights Defender Thanthai Periyar மற்றும் நிலவு பூ.கணேசன் நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டு விழா இன்று (19.3.2024 - செவ்வாய்க் கிழமை) மாலை 6 மணிக்கு வேப்பேரி, பெரியார் திடல், அன்னை மணியம்மையார் அரங்கில் நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சிக்கு திராவிடர் கழகப் பொருளாளர் வீ.குமரேசன் வரவேற்றுப் பேசுகிறார்.*

*திராவிடக் கழகத் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் தலைமை வகிக்கிறார். வீரமர்த்தினி, அ.அருள் மொழி, ச.இன்பக் கனி, சே.மெ.மதிவதனி, கோ. கருணாநிதி, ப.சேரலாதன், க.செல்வமணி, சோ.முல்லையப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*புத்தகங்களை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிடுகிறார்.*

*மனித உரிமைக் காவலர் தந்தை பெரியார் புத்தகத்தை கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பெற்றுக் கொள்கிறார்.*

*The Human Rights Defender Periyar புத்தகத்தை கழக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ.பெற்றுக் கொள்கிறார்.*

*நிலவு பூ.கணேசன் நூற்றாண்டு விழா மலர் - திராவிடர் இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு பெற்றுக் கொள்கிறார்.*

*திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆய்வுரை நிகழ்த்துகிறார்.*

*திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் முனைவர் துரை. சந்திரசேகரன் ஏற்புரை நிகழ்த்துகிறார்.*

*திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்குகிறார்.*

*காம்ரேடு பதிப்பகம் காஞ்சி பிரபாகரன் நன்றி கூறுகிறார்.*



தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட, கே.டி.சி. நகர் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்டு ரூபாய் 152 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்காத பகுதிகளில் புதிதாக அமைக்கும் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, கடந்த வருடம் டிசம்பர் மாதம் பெய்த வரலாறு காணாத கனமழையின் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு புதிதாக வீடுகளை கட்டுவதற்கு தமிழக அரசு சார்பில் வழங்கப்பட உள்ள நான்கு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, திருநங்கைகள் சுயதொழில் செய்திடும் வகையில் அரசின் சார்பில் நிதியுதவி உள்ளிட்ட நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். முன்னதாக, தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட, முத்துகிருஷ்ணாபுரம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்நல அலுவலகத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான பெ.கீதாஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், தி.மு.க. மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று (18.3.2024) நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் 10 (பத்து) தொகுதிகள் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தத்தில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு. செல்வப்பெருந்தகை அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர்கள் எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், கே.வி. தங்கபாலு, காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் எஸ்.ராஜேஷ் குமார் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 9.3.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பின்வரும் 10 (பத்து) தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (18.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. திருவள்ளூர் (தனி)
2. கடலூர்
3. மயிலாடுதுறை
4. சிவகங்கை
5. திருநெல்வேலி
6. கிருஷ்ணகிரி
7. கரூர்
8. விருதுநகர்
9. கன்னியாகுமரி
10. புதுச்சேரி

(கு. செல்வப்பெருந்தகை)
தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று (18.3.2024) நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடும் ஒரு தொகுதி தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தத்தில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக செயலாளர் துரை வையாபுரி, துணை பொதுச் செயலாளர் மல்லை சத்யா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 8.3.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் பின்வரும் தொகுதியில் போட்டியிடுவதென இன்று (18.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

**தொகுதி விவரம்**

1. திருச்சிராப்பள்ளி

(வைகோ)
பொதுச்செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

### க.பொன்முடியை அமைச்சராக்க மறுக்கும்

# ஆளுநர் ரவியின் செயல் சட்டமீறல் - அரசியல் அமைப்புக்கு எதிரானது !

### மூத்த வழக்கறிஞர் – பி.வில்சன் எம்.பி. பதிவு!

சென்னை, மார்ச் 19-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் அமைச்சர் க.பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும் என்று எழுதிய கடிதத்தை ஏற்க மறுத்த தமிழ்நாடு ஆளுநர் ரவியின் செயல் சட்ட மீறல் மட்டுமின்றி, அரசியலமைப்புப் பிரிவு (164(1)க்கு எதிரானது என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தமது 'எக்ஸ்' வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.



தி.மு.க. தலைமைக் கழக சட்டத் தலைமை ஆலோசகரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் எம்.பி., அவர்கள் தனது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, அரசியலமைப்புச் சட்டத்துக்குச் சிறிதும் மரியாதை அளிக்காமல், மீண்டும் மீண்டும் தவறிழைப்பவராக இருந்து வருகிறார்.

க.பொன்முடி 19.12.2023 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டார். ஆனால், 11.03.2024 அன்று மாண்பமை உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பை மற்றும் தண்டனையை நிறுத்தி வைத்தது. அவ்வாறு தீர்ப்பை மற்றும் தண்டனையை நிறுத்தி வைத்தபோது, அமைச்சர் பொறுப்பை வகிக்கவோ, சட்டமன்ற உறுப்பினராகத் தொடரவோ இடையூறு ஏற்படக் கூடாது என்பதற்காகவே இடைக்கால உத்தரவு விதிப்பதாகவும், இல்லையென்றால் அது சரிசெய்ய இயலாத பாதிப்பை உருவாக்கும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்கால உத்தரவு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 13.03.2024 என்று தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் 19.12.2023 தேதியிலான அவரது பதவிநீக்கம் செல்லாது என்று அறிவித்தார். மேலும், 16.03.2024 அன்று திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி (எண்.76) காலியாக உள்ளதாக அறிவித்த அறிவிக்கையையும் தேர்தல் ஆணையம் திரும்பப் பெற்றுக்கொண்டது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுநருக்கு கடிதம்!**

எனவே அரசியலமைப் பின்பாற்பட்ட அனைத்து நிறுவனங்களும் மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டுள்ளன. க.பொன்முடி அவர்களது வழக்கின் தீர்ப்பும் தண்டனையும் நிறுத்தி வைக்கப்பட்டதையடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.03.2024 அன்று, க.பொன்முடி அவர்களை அமைச்சராக நியமிக்கவும், அவருக்கு உயர்கல்வித்துறையை ஒதுக்கிடவும் கோரி ஆளுநர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இவையனைத்தையும் மீறி, ஆளுநர் ரவி, "மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பினை நிறுத்தித்தான் வைத்துள்ளது, இரத்து செய்யவில்லை" என உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குத் தனது சொந்த விளக்கத்தை அளித்துள்ளார். இது ஓர் அபத்தமான பொருள்கோடல் என்பதோடு, மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயலுமாகும்.

அரசியல் சட்டப்பிரிவு 142 மற்றும் 144இன்படி ஆளுநர் என்பவர் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர் ஆவார். மேலும், க.பொன்முடி அவர்களை உயர்கல்வித் துறை அமைச்சராக நியமிக்க தமிழ்நாடு முதலமைச்சர் விடுத்த கோரிக்கையை ஏற்க அவர் அப்பட்டமாக மறுத்தது சட்டமீறலும் அரசியலமைப்புப் பிரிவு 164(1)க்கு எதிரானதும் ஆகும்.

**ஆளுநரின் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும்!**

எம்.எல்.ஏ. பதவிநீக்கம் செய்யப்படக் கூடாது என்பதற்காகவே உச்சநீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், ஆளுநரின் செயல் ஐயத்திற்கிடமின்றி, நீதிமன்ற அவமதிப்பே ஆகும்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உச்சநீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்தத் தண்டனை சட்டத்தின் பார்வையில் செல்லத்தக்கதல்ல. இச்சூழலில், ஆளுநரின் பொருள்கோடலைச் சட்ட அறியாமையாக மட்டுமல்ல, மாண்பமை உச்சநீதிமன்ற அவமதிப்பாகவும் கொள்ள வேண்டியுள்ளது. இதற்காக ஆளுநர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட வேண்டும்.

ஒருவர்அறநெறிப்படியோ பிற அடிப்படையிலோ அமைச்சராகத் தொடரலாமா வேண்டாமா என்பதை ஆளுநர் முடிவுசெய்ய இயலாது என்பது தற்போது ஐயத்திற்கே இடமின்றி நிறுவப்பட்டுவிட்டது. இது முழுக்க முழுக்க முதலமைச்சரின் விருப்புரிமைக்குட்பட்டது. அமைச்சராக நியமிக்கப்படுபவரின் தகுதிப்பாடு குறித்த முதலமைச்சரின் மதிப்பீட்டை ஆளுநர் கேள்வியெழுப்ப முடியாது என்பதைப் பல்வேறு தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் தெளிவாக்கி விட்டது.

தமிழ்நாடு பா.ஜ.க.வின் அறிவிக்கப்படாத தலைவராகவே ஆளுநர் செயல்பட்டு வருவதாலும், ஊடக கவனத்தை ஈர்ப்பதற்காகச் செயல்படுவதே அவரது இயல்பாகிவிட்டதாலும் அரசுடன் அவர் கடைப்பிடிக்கும் மோதல்போக்கு கொஞ்சமும் வியப்பளிக்கவில்லை. ஆனால் அவரது தற்போதைய செயலால் அவர் தாம் வகிக்கும் அரசியலமைப்புப் பொறுப்புக்குத் தகாத, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலைப் புரிந்துள்ளார். புனித ஜார்ஜ் கோட்டையில் பா.ஜ.க.வினால் ஒருநாளும் கால்பதிக்க முடியாதென்பதால், ஆளுநர் மாளிகையில் இருந்துகொண்டு மாநில அரசுக்கு இணையாக இன்னொரு அரசை நடத்த அவர் முயல்கிறார்.

அரசியலமைப்புக்கோ, சட்டங்களுக்கோ, உச்சநீதிமன்றத் தீர்ப்புகளுக்கோ துளியும் மதிப்பளிக்காத இந்த ஆளுநர் உடனே பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும். ஆளுநர் பதவிக்கே இழுக்கான ரவி அவர்களை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எப்போது அவர் வேண்டுமென்றே உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை மீறி நடக்கவும், அரசியலமைப்பு முறைகளைக் களங்கப்படுத்தவும், சட்டத்தின் விதிகளைப் புறக்கணிக்கவும் தலைப்பட்டாரோ அப்போதே அவர் தாம் வகிக்கும் பதவியில் நீடிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டார்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தமது 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# எஸ்.பி.ஐ. செயல்பாடு : உச்சநீதிமன்றம் அதிருப்தி ...

**முதல் பக்கத் தொடர்ச்சி**

இதில், கம்பெனிகள் தேர்தல் பத்திரங்கள் வாங்கிய தேதி, தொகை பற்றிய விவரம் தனியாகவும், அரசியல் கட்சிகள் அதை வங்கியில் சமர்ப்பித்த தேதி, தொகை விவரம் தனியாகவும் இருந்தது. எந்தக் கட்சிக்கு எந்தக் கம்பெனி நிதி கொடுத்தது என்பதை கண்டுபிடிப்பதை தடுக்க தேர்தல் பத்திரத்தின் எண் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையில் மேற்கண்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

**உச்சநீதிமன்றம் அதிருப்தி**

அப்போது தலைமை நீதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டதாவது, "ஒவ்வொரு பத்திரத்திலும் உள்ள எண்ணையும் ஏன் SBI இன்னும் தெரிவிக்கவில்லை?. உச்சநீதிமன்றம் ஏற்கனவே அளித்த தீர்ப்புப்படி பத்திர எண்களை வெளியிட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் சார்ந்த அனைத்து விவரங்களையும் வெளியிட வேண்டும் என்பதையே நாங்கள் விரும்புகிறோம்.

ஒவ்வொரு பத்திரத்திலும் உள்ள தனி அடையாள எண்ணை கட்டாயம் வெளியிட வேண்டும். மறைக்கக்கூடிய அனைத்துத் தகவல்களையும் SBI வெளியிட வேண்டும். தேர்தல் பத்திர வழக்கில் SBIன் செயல்பாடு நேர்மையானதாக இல்லை. தேர்தல் பத்திர வழக்கின் தீர்ப்பை செயல்படுத்துவதில் எஸ்.பி.ஐ. வங்கியின் அணுகுமுறை சரியில்லை. உச்சநீதிமன்றத்தின் முழு தீர்ப்பை செயல்படுத்த வேண்டியது எஸ்.பி.ஐ. வங்கியின் முழு கடமை.

தேர்தல் பத்திர ரகசிய எண்ணை வெளியிடுவது தொடர்பாக மார்ச் 21ம் தேதி மாலை 5 மணிக்குள் எஸ்.பி.ஐ. பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.

எந்தத் தரவுகளும் விடுபடவில்லை என்று எழுத்துப் பூர்வமாக எஸ்.பி.ஐ. பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். பத்திரம் வாங்கப்பட்ட தேதி, பெயர், சீரியல் எண்கள், ஆல்பா நியூமரிக் எண்கள் உள்ளிட்ட அனைத்தையும் வெளியிட வேண்டும். எஸ்.பி.ஐ. தாக்கல் செய்ய உடன் தேர்தல் ஆணையம் அதன் இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும்."

இவ்வாறு தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!



# நாற்பது எல்லை! தோற்பது இல்லை!!



முத்துவேலன் பேரப் புதல்வர்
முன்னேற்றக் கழகத்தின்
மூன்றாம் முதல்வர்
•
தர்ப்பைப் புல்லை மேயாத
தமிழ்நாட்டின் தாய்ச்சிங்கம்
•
பிள்ளையார் சுழி போடாத
உடன்பிறப்புக் கடிதம்
சங்கத் தமிழ் ஈன்ற
பிள்ளைத் தமிழ்.

அனைவரையும்
அம்பேத்கராய்ப் பழக்க வைக்க
தமிழ்நாட்டையே
ஒரு
நூலக மாவட்டமாய்
மாற்றிய
எங்கள் எழுத்ததிகாரம்!
•
தமிழரின் வெற்றிடத்தை
வெளிச்சமாக்கிய
சூரிய பேனாவின்
மின்சாரக் கையொப்பம்!
•
தாய் தாலாட்டுவாள்
தாயையே தாலாட்டும்
இலவசப் பேருந்து
•
நடை பயணத்தால்
அனைவரையும் சுற்றி வரும்
ஆயிரம் கால் மண்டபம்!
•
கரிகாலக் குயில் ஊதிய
புன்னகைப் புல்லாங்குழல்
•
கதிரவனுக்குப் பிறந்த
கலங்கரை விளக்கு
•
ஒரு -
வெண்தாடியில் நெசவு நெய்து
வேட்டி சட்டை அணிந்தவன்
•
தமிழர்கள் வாசிக்கும்
தமிழர்நாட்டின்
தலைப்புச் செய்தி
•
பகுத்தறிவுப் பாதையில்
ஒய்வில்லாமல் உருண்டோடும்
திருவாரூர் தேர்!

பெரியாரின் கைத்தடியை
முதுகெலும்பாய்க் கொண்டவன்
•
பெரு வெள்ளத்தை எதிர்க்க
வேட்டியை மடித்துக்கொண்டு
வீதிக்கு வந்தவன்!
•
ஒரு
பல்லவியை இழந்த பின்னும்
தமிழ்நாட்டை
அனுபல்லவியாய் ஆள்பவன்
•
அண்ணா கலைஞர் என்னும்
எதுகை மோனையால் எழுதிய
மக்கள் -
மனப்பாடம் செய்து கொண்ட
மரபுக் கவிதை
•
சிறுத்தைகள் காவல்காக்கும்
கழகத் தளபதி
•

**கவிஞர் கபிலன்**

கலைஞரின் தமிழை
சுமந்து செல்லும்
காகித ஓடம்
மக்கள் மனதை ஈரமாக்கி
உழுத
மண்புழு
மாண்புமிகு தலைவர்களின்
மனிதமிகு தலைவர்
திராவிடப் பரம்பரையின்
நவீன நாற்காலி
கோபாலபுரத்து
கொடிகாத்த குமரன்
அனைத்து தமிழர்களின்
அடையாள அட்டை
வளையல்களால் உடைக்க
முடியாத
வானவில்!
கலைஞரால்
நிரப்பப்படாத பக்கங்களின்
நெஞ்சுக்கு நீதி
•
கூழாங்கல்லை நட்டுவைத்தால்
கோபுரம் முளைக்காது
முதல்வரின் புன்னகைக்கு
முகமூடி கிடையாது.

•
மக்களின் மரபணு
திராவிட திமிர்
காலத்தின் நிழல்
கலகத்தின் குரல்
கரைகண்ட கடல்
முப்பது நாளும் முழு நிலா
சூரியனின் சுவாசக் காற்று
தயாளு தமிழச்சியின்
தாலாட்டு
தாகம் கொண்ட தமிழனுக்கு
தண்ணீர் பந்தல்
•
தமிழ்நாட்டுப் பெண்கள் இன்று
ஆயிரத்தில் ஒருத்தி அல்ல
ஒருத்திக்கு ஆயிரம்
என்ன அதிசயம்!
தாமரையில் தண்ணீர்தான்
ஒட்டாது
இப்பொழுது
இலையே ஒட்டவில்லை!
•
எதிர்கட்சிகள் உதிரிக் கட்சிகள்
அனைத்தையும்
அடைப்புக்குறிக்குள்
பூட்டி வைத்து
வியப்புக் குறியாய்
வெல்லப் போவது
எங்கள்
சூரியனுக்குப் பிறந்த
சுந்தர புருஷன்
•
நாற்பது எல்லை - இனி
தோற்பது இல்லை!
•

---

தேர்தல் பத்திரம் நன்கொடை விவகாரம்:

# பா.ஜ.க.விற்கு எதிராக எடப்பாடி பழனிசாமி பேசாதது ஏன்?

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி. பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் அறிக்கை!

சென்னை, மார்ச் 19 -

தேர்தல் பத்திரம் நன்கொடை விவகாரத்தில் பா.ஜ.க.விற்கு எதிராக எடப்பாடி பழனிச்சாமி பேசாதது ஏன் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி. பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் அறிக்கையில் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., எஸ்.டி பிரிவு மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

நாங்கள் யோக்கியர்கள் என்று பா.ஜ.க.வினர் அணிந்திருந்த பொய் முகமூடியை கிழித்துத் தொங்க விட்டிருக்கிறது உச்ச நீதி மன்றம்.

அனைத்துக் கட்சிகளுக்கும் தேர்தல் நன்கொடை வழங்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. தங்களுக்குப் பிடித்த கட்சிகளுக்கு தொழிலதிபர்கள் முதல் பொது மக்கள் வரை தேர்தல் நன்கொடை வழங்கிவந்தார்கள்.

இத்தகைய தேர்தல் நன்கொடை வழங்குவது வெளிப்படையாக நடந்தது. ஆனால், மோடி ஆட்சிக்கு வந்ததும் தேர்தல் பத்திரத்தை அறிமுகப்படுத்தினார். அதில், நன்கொடை கொடுப்பவர் பெயர் ரகசியமாக வைக்கப்படும் என்று அறிவித்தது தான் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியது.

**தேர்தல் பத்திரங்களை பா.ஜ.க. லஞ்சமாக பெற்றதாக குற்றச்சாட்டு!**

இது குறித்து கேள்வியே கேட்க முடியாது என்றனர். அதேசமயம், தங்களுக்கு நெருங்கிய தொழிலதிபர்களுக்குப் பெரிய பணிகளை வழங்கிவிட்டு அதற்கு ஈடாக அதாவது லஞ்சமாக தேர்தல் பத்திரங்களை பா.ஜ.க. பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

அதுமட்டுமின்றி, 32 நிறுவனங்கள் மீது அமலாக்கத்துறையும் சி.பி.ஐ.யும் ரெய்டு நடத்தின. இந்த ரெய்டு நடத்தப்பட்ட சில தினங்களில் இந்த நிறுவனங்கள் தேர்தல் நன்கொடைப் பத்திரங்களை பா.ஜ.க.வுக்கு அளித்தனர். அதாவது மிரட்டி தேர்தல் நன்கொடை வாங்கியிருக்கிறது பா.ஜ.க.

ஊழல் செய்யும் விசாரணை அமைப்புகளை ஆயுதமாக வைத்து மிரட்டியும் 11 ஆயிரத்து 562 கோடி ரூபாய் அளவுக்கு தேர்தல் நன்கொடை பத்திரத்தை வழிப்பறிக் கொள்ளையன் போல் பறித்திருக்கிறது பா.ஜ.க.

இதை எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்த தேர்தல் நன்கொடைப் பத்திரங்களுடன் ஒப்பிட முயல்கிறார்கள். தேர்தல் நன்கொடை பத்திரங்களை சட்டமாக்கிவிட்டு எதிர்க்கட்சிகளுக்கு எப்படி வந்தது என்று கேட்பது சிறுபிள்ளைத்தனமாகும்.

எதிர்க்கட்சிகள் தங்களுக்குக் கிடைத்த தேர்தல் நன்கொடை பத்திரம் குறித்த விவரத்தை தேர்தல் ஆணையத்திடம் ஏற்கெனவே தெரிவித்துள்ளனர். பா.ஜ.வைப் போல் எஸ்.பி.ஐ. வங்கியை கைக்குள் போட்டுக் கொண்டு தில்லுமுல்லு செய்யவில்லை. ரகசியம் என்று மூடி மறைக்கவில்லை.

பா.ஜ.க.வுக்கு மட்டும் தேர்தல் நன்கொடை வந்தது எப்படி என்ற கேள்விக்கு பா.ஜ.க.விடம் பதில் இருக்கிறதா? சலுகை காட்டியும் மிரட்டியும் பெறப்பட்ட தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் உலகே வியக்கும் வகையில் மெகா ஊழலைச் செய்துள்ளது பா.ஜ.க.

ஆனால், இங்கிருக்கும் எடப்பாடி பழனிசாமியோ, அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் தி.மு.க.வை மட்டுமே குறை சொல்லிக் கொண்டிருக்கிறார். உண்மை நிலை தெரிந்து பேசுகிறாரா? இல்லை அவருக்கு ஒன்றுமே தெரியவில்லையா?

ப்யூச்சர் கேமிங் என்ற அந்த நிறுவனத்துக்கு சலுகை அளித்து நன்கொடையை பெற்றது போல பொய்யான செய்தியை எடப்பாடி பழனிச்சாமி பரப்புகிறார். தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டத்தில் தான் தேர்தல் நன்கொடை வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு எதிர்க்கட்சி குறிப்பிட்ட நிறுவனத்திற்கு சாதகமாக எதைச் செய்து விட முடியும்?

ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா ஆளுநர் முன்பு நிலுவையில் இருந்த போது அதற்கு ஒப்புதல் தரக் கோரி ஒரு முறையாவது ஆளுநருக்கு எடப்பாடி வேண்டுகோள் வைத்திருப்பாரா? கடுமையாக போராடி ஆளுநரை ஒப்புதல் தர வைத்தது தி.மு.க. அரசு தான் என்பதை நாடறியும்.

**கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான்!**

பல உயிர்களைக் குடித்த ஆன்லைன் சூதாட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது தி.மு.க. அரசு தான். ஆன்லைன் சூதாட்டத்தை வளர்த்தெடுத்தது அ.தி.மு.க. தான் என்பதை மறைக்கப் பார்க்கிறார் எடப்பாடி பழனிசாமி. கெட்டிக்காரன் புளுகே எட்டு நாளைக்கு தான் இந்த எடப்பாடியின் புளுகு எத்தனை நாளைக்கோ?

பா.ஜ.க.வுடன் இனி கூட்டணியே இல்லை என்று அறிவித்துள்ள எடப்பாடி பழனிசாமி, உச்ச நீதி மன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்ட பா.ஜ.க. மீது விமர்சனம் வைக்காதது ஏன்?

நியாயமாகப் பார்த்தால், அவர் பா.ஜ.க. மீது தான் இத்தகைய விமர்சனத்தை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு விமர்சித்திருந்தால் பா.ஜ.க.வை அவர் உண்மையிலேயே எதிர்க்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

நாடு முழுவதும் பா.ஜ.க.வுக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும் போது எடப்பாடி பழனிசாமி அமைதியாக இருப்பது சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது.

எனவே சிறுபான்மை மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுவிட்டு பா.ஜ.க.வின் அடிமையாக மீண்டும் எடப்பாடி மாற மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறியதிலிருந்து இன்று வரை, பா.ஜ.க.வுக்கு எதிராக எடப்பாடி வாயைத் திறக்கவேயில்லை. தேர்தல் நன்கொடைப் பத்திரம் விவகாரத்திலாவது அவர் பா.ஜ.க.வுக்கு எதிராக தைரியம் இருந்தால் விமர்சனத்தை வைக்கட்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

மதுரை மாநகர் மாவட்டக் கழக முன்னணித் தோழர்

# ஏ.ஆர்.சந்திரனின் சகோதரர் ஏ.ஜெயராமன் மறைவு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அஞ்சலி!



மதுரை, மார்ச் 19 -

மதுரை மாநகர் மாவட்டக் கழக முன்னணித் தோழரும், மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவருமான மறைந்த ஏ.ஆர்.சந்திரன் அவர்களின் சகோதரரும், மதுரை மாநகர் முன்னாள் இளைஞர் அணி நிர்வாகியும், தற்போது 51-வது வட்டக் கழகச் செயலாளருமான ஏ.ஜெ.அசோக்குமாரின் தந்தையுமான ஏ.ஜெயராமன் (வயது 70) நேற்று முன்தினம் (17.3.2024) மாலை 5 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த கழகத் தோழர் ஏ.ஜெயராமன் தமது சகோதரர் ஏ.ஆர்.சந்திரன் அவர்களுடன் இணைந்து மறுமலர்ச்சி மன்றத்தை தொடங்கி வடக்கு மாசி வீதியில் கழகம் வளர்த்தவர். மறைந்த கழகத் தலைவர்கள் மதுரை எஸ்.முத்து, எஸ்.எஸ்.தென்னரசு, வே. தங்கபாண்டியன் போன்றோரை கொண்டு தமது சகோதரருடன் இணைந்து பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.

மறைந்த ஏ.ஜெயராமன் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (18.3.2024) பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாசி வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு தத்தனேரி இடுகாட்டை அடைந்து அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஏ.ஜெயராமனின் மறைவுச் செய்தியறிந்து முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி, முன்னாள் மாவட்டச் செயலாளர் வேலுச்சாமி, முன்னாள் மேயர் பெ. குழந்தை வேலு மற்றும் கழகத் தோழர்கள் அவரது இல்லம் சென்று அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

---

சீர்மரபினருக்கு ஒற்றைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - வல்லரசு பார்வர்டு பிளாக் நன்றி!

## நிறுவனர் - தலைவர் பி.என்.அம்மாவாசி அறிக்கை!

சென்னை, மார்ச் 19 -

தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வல்லரசு பார்வார்டு ப்ளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாவாசி நன்றி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாவாசி தனது நன்றி கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

வல்லரசு பார்வர்டு பிளாக் கோரிக்கையை ஏற்று, 68 சீர்மரபினர் சாதிகளைச் சேர்ந்த மக்களின் நீண்டகால கோரிக்கையான டி.என்.டி அதாவது சீர்மரபின பழங்குடியினர் என்ற ஒற்றைச்சான்றிதழ் வழங்கப்படும்.

இது சம்பந்தமாக அரசாணை பிறப்பிக்கப்படும் என முதல்வர் அவர்கள் இன்று அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார். அதற்காக நான் டி.என்.டி வகுப்பைச்சேர்ந்த பிரமலை கள்ளர் என்ற முறையில் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞரைப் போன்று பிற்படுத்தப்பட்ட மக்கள் சீர்மரபினருக்கு பாடுபடும் ஒரே முதல்வர் நமது தளபதியார் அவர்கள்.

இந்த குழப்பம் எம்.ஜிஆர் முதலமைச்சராக இருந்த போது அரசாணை 1310/1979 ஜூலை 30-ஆம் தேதி வெளியிடப்பட்டது. அதில் டி.என்.டி. சீர்மரபு பழங்குடியினர் என்பது மாற்றப்பட்டு டி.என்.சி அதாவது சீர்மரபு வகுப்பினர் என மாற்றப்பட்டது.

எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்த போது இந்த குழப்பம் அதிகரித்து மத்திய, மாநில அரசுகளில் வேலைவாய்ப்பு மற்றும் சலுகைகளை பெறுவதில் குழப்பம் நீடித்தது.

ஆனால் தமிழ்நாடு முதல்வர் இதற்கு நல்ல முடிவாக டி.என்.டி. என்ற சீர்மரபு பழங்குடியினர் என்ற ஒற்றை சான்றிதழ் வழங்க அரசாணை அறிவிக்கப்படும் என 16.03.2024 அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். அவருக்கு வல்லரசு பார்வார்டு ப்ளாக் கட்சியின் நிறுவனர் தலைவர் ஆகிய நான் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---




ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் தருமபுரி பாராளுமன்ற தொகுதி வார் ரூம்மினை மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளர் எஸ்.இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. தடங்கம்.பெ. சுப்ரமணி, மேற்கு மாவட்டக் கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர்கள் டி.சந்திரசேகர், ஆர்.சிவம்,மாவட்ட தலைவர்கள் பி.கே.தாஸ், முனிராஜ், மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி மற்றும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

---

தி.மு.க. கூட்டணிக்கு

# அம்பேத்கர் முன்னணிக் கழகம் ஆதரவு!

## நிறுவனத் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு அறிக்கை!

சென்னை, மார்ச் 19 -

தி.மு.கழகக் கூட்டணிக்கு ஆதரவளித்து அம்பேத்கர் முன்னணிக் கழகம் மற்றும் சென்னை துறைமுக எஸ்.சி. எஸ்.டி. தொழிலாளர்கள் கழக நிறுவனத் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு, பொதுச் செயலாளர் இ.பிரபாகரன் ஆகியோர் அறிக்கையில் தெரி வித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு: -

அம்பேத்கர் முன்னணி கழகம் தொடர்ந்து தி.மு.க. விற்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறோம்.

வரும் நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகளின் அமோக வெற்றிக்கு பாடுபட உள்ளோம்.

இவ்வாறு அம்பேத்கர் முன்னணி கழக நிறுவனர் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு மற்றும் அம்பேத்கர் முன்னணி கழக பொதுச் செயலாளர் ஜி.பிபாகரன் ஆகியோர் கூட்டாக ஆதரவை செய்தியின் மூலம் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு அம்பேத்கர் முன்னணிக் கழக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

---

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்

# ஆர்.டி.குமார் மதன்குமார் தந்தை திருவுருவப் படம் திறப்பு!

## எஸ்.பூச்சி முருகன் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - எஸ்.ஜோயல் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 19 -

வட கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் ஆர்.டி. ஆதவ் சசிகுமார் சகோதரர்களின் தந்தை திருவொற்றியூர் திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடி மு.தீனதயாளன் கடந்த 29-02-2024 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் 16 ம் நாள் நினைவேந்தல் நிகழ்சியும், படத்திறப்புவிழா நிகழ்ச்சியும் கடந்த 13-03-2024 அன்று திருவொற்றியூர் ஜெய்ஹிந்த் நகரில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை நிலைய செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு அன்னாரின் திருஉருவப்படத்தினை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல், பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக் தமிழக மனித உரிமை ஆணைய உறுப்பினர் வழக்கறிஞர் வி. கண்ணதாசன், திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம. அருள்தாசன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள். வட்ட கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள். ஜெய்ஹிந்த் நகர் நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ.வி.தட்சிணாமூர்த்தி

**மார்ச் 19 (2012)**



**நான்கு முறை ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட 7வது வார்டு கிளைக் கழகச் செயலாளராகவும், இரண்டுமுறை வடசென்னை மாவட்டக் கழக பொருளாளராகவும், அதன்பின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலக் குழு தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**சென்னை குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண சென்னை மாவட்டக் கழகம் நடத்திய சாலை மறியலில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.**

**கழகம் அறிவித்த இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு தரக்கோரி நடத்திய அறப்போராட்டம், இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய அறப்போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தேர்தலும்.. பா.ஜ.க.-வின் தில்லு முல்லும்... 10

“நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் அது பா.ஜ.க.விற்குத்தான் விழும்” என்று பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொல்லியிருப்பதை ஒட்டுமொத்த இந்தியாவும் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருக்கும் சூழலில் இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.




பல்வேறு மொழி, இனம், கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்ட இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தல் என்பது உலகின்பல்வேறு நாடுகளாலும் உற்று நோக்கப்படக் கூடிய ஒன்று. இதுவரை “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்று சாத்தியமே இல்லாத ஒன்றைமீண்டும் மீண்டும் சொல்லி வந்த பா.ஜ.க. இன்று ஏழு கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

10 ஆண்டுகால பாசிச பா.ஜ.க.வின் ஆட்சிக்கு முடிவுரை எழுதப்படுவதை உறுதி செய்யும் விதமாக,இந்தியா கூட்டணிக்கு மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் அதிகரிக்கும் சூழலில், தோல்வி பயத்தில் பா.ஜ.க. செய்யும் தேர்தல் தில்லு முல்லுகள் எவையெல்லாம் என்பதை நாட்டு மக்களுக்கு வெளிச்சமிட்டு காட்டுவதும், பாஜகவின் தில்லு முல்லு வேலைகளை முறியடிக்க இந்தியா கூட்டணிக் கட்சியினர் மிகுந்த கவனத்தோடும், ஒற்றுமை உணர்வோடும் பணியாற்றி இக்கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தேடித்தர வேண்டிய தன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.அதில், முதல் கட்டத்திலேயே வரும் ஏப்ரல் 19 ம் தேதியே தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

தமிழ்நாட்டில் முதல்கட்டத்திலேயே தேர்தல் நடத்தப்பட இருப்பது பிரதமர் மோடிக்கு முன் கூட்டியே சொல்லப்பட்டிருக்கிறதோ என்ற ஐயத்தை அரசியல் நோக்கர்கள் பலரும் எழுப்புகின்றனர். காரணம், சென்னை பெரு மழை வெள்ளம், நெல்லை, தூத்துக்குடி பெரு மழை வெள்ளம் போன்ற வரலாறு காணாத இயற்கைப் பேரிடர்களின் போது நாட்டு மக்கள் செத்து மடிந்து கொண்டிருந்த போது தமிழ்நாட்டிற்கு வராத பிரதமர் மோடி, கடந்த மாதம் மட்டும் தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்குவந்து கொண்டேயிருந்தார்.



பத்து ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கு எந்த ஒரு திட்டத்தையும் தந்திடாத மோடி ஆட்சி முடிவடையும் தருணத்தில், தமிழ்நாட்டு மக்களின் நலனில் அக்கறை இருப்பது போல் நாடகம் நடத்தத் தொடங்கினார்.இவையெல்லாம் தன்னிச்சையாக செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையம் மோடியின் பயணத் திட்டத்திற்கு ஏற்றவாறு தேர்தல் தேதிகளைஅறிவித்துள்ளதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அரசியல் விமர்சகர்கள் எழுப்பும் கேள்விக்கு இது வரை ஆக்கப்பூர்வமான பதில் இல்லை.

மோடியின் பத்து ஆண்டு கால ஆட்சியில், அமலாக்கத்துறை, சி.பி.ஐ, வருமான வரித் துறை என்று ஜனநாயகத்தின் அனைத்து முகமைகளும் பா.ஜ.க. வின் ஒரு பிரிவு போல் செயல்படத் தொடங்கியதை நாம் அறிவோம். அந்த குற்றச்சாட்டிற்கு தேர்தல் ஆணையமும் உள்ளாவது என்பது ஜனநாயகத்திற்கு பேராபத்தைத் தரவல்லது.தமிழ்நாட்டிற்கு பிரதமர் வந்ததையும், முதற்கட்ட தேர்தல் பட்டியலில் தமிழ்நாடு இடம்பெற்றதையும் வைத்து மட்டுமே மிகப்பெரியசந்தேகப்பார்வை ஒன்றை தேர்தல் ஆணையத்தின் மீது வீசுவதா என்று சிலர் கேட்கக் கூடும்.

நான் தெளிவாகச் சொல்கிறேன் இதைத் தாண்டி இன்னும் பல காரணிகள் தேர்தல் ஆணையத்தின் மீதான ஐயப்பாட்டிற்குள் உள்ளன.தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமாருக்கு அடுத்ததாக தேர்தல் ஆணையராக இருந்தவர் அனூப் சந்திர பாண்டே. இவர் கடந்த பிப்ரவரி மாதம் ஓய்வு பெறுகிறார். இவ



**தமிழ்க்கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்

ருக்கு பதிலாக வேறொரு தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை உருவானது.

இந்த நிலையில் தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்குசில நாட்களுக்கு முன் (மார்ச் 9 ம் தேதி) மற்றொரு தேர்தல் ஆணையரான அருண் கோயல் திடீரென்று ராஜினாமா செய்கிறார்.இவரின் ராஜினாமா உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்திய நிலையில்தான் அருண் கோயலின் ராஜினாமாவை மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி பாராட்டுகிறார். “அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாத அருண் கோயலுக்கு நான் சல்யூட் செய்கிறேன்”, என்று மம்தா பானர்ஜி சொன்னதையும் நாம் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.



**அருண் கோயல்**

எனில், அருண் கோயலுக்கு என்ன மாதிரியான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன என்பது நாட்டு மக்களுக்கு அவசியம் தெரிய வேண்டும்.தேர்தல் அறிவிக்கப்பட மிகச் சில நாட்கள் உள்ள நிலையில், 96 கோடி வாக்காளர்கள் உள்ள ஒரு துணைக் கண்டத்தில் இரண்டு தேர்தல்ஆணையர்கள் இல்லை என்பதெல்லாம் மோடியின் ஆட்சியைத் தவிர வேறொருவர் ஆட்சியில் கற்பனை செய்து கூட பார்க்க இயலாத ஒன்று.

இரண்டு தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழலில் தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் தலைமை நீதிபதிக்கு இடமில்லை என்றுமோடி அரசு சட்டத்திருத்த மசோதா கொண்டு வந்து அதை நிறைவேற்றிய நிலையில், நீதிபதி இல்லாமல் புதிய தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுக்கும் குழு கூடியது.

இக்குழுவில் எதிர்க்கட்சியின் தரப்பில் கலந்து கொண்ட மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் கூட்டத்திற்கு சில நிமிடங்கள் முன்னதாகத்தான்தேர்தல் ஆணையர்களாக யாரையெல்லாம் தேர்ந்தெடுக்கலாம் என்பது

> **வா**க்காளர்கள் தாங்கள் அளிக்கும் வாக்கு யாருக்கு பதிவாகியுள்ளது என்பதை அறிந்து கொள்ளும் அடிப்படை உரிமையைக் கூட தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்ய முடியவில்லை.இந்த நிலையில்தான், தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத் மக்களவைத் தொகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த் என்பவர், நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் அது பா.ஜ.க. விற்குத்தான் செல்லும் என்று பகிரங்கமாகச் சொன்னதைக் கேட்டு மனசாட்சி உள்ளவர்கள் அதிர்ந்து போனார்கள்.

குறித்த பரிந்துரைப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. சில நிமிடங்களில் இதில் யார் சரியானவர்கள்என்பதை எப்படி நாங்கள் கண்டறிய முடியும் என்று கேள்வி எழுப்பிய ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, இது முற்றிலும் ஒரு தலைபட்சமானது என்று குற்றம் சாட்டுகிறார்.

ஜனநாயகத்தின் அனைத்து விழுமியங்களையும் காலில் போட்டு மிதிக்கும் மோடி கூட்டமோ இதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இறுதியில், சுக்பீர் சிங் சாந்து, ஞானேஷ் குமார் ஆகிய இரண்டு பேர் தேர்தல் ஆணையர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.இதில், ஞானேஷ் குமார் உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான கூட்டுறவு அமைச்சகத்தில் செயலாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.இவையெல்லாம் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளின் மீதான ஐயத்தை மேலும், மேலும் அதிகமாக்கிக் கொண்டே சென்றன.



**(இடமிருந்து) : சுக்பீர் சிங் சாந்து, ராஜீவ் குமார், ஞானேஷ் குமார்**

ஏற்கனவே மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் செலுத்தும் வாக்குகளோடு சேர்த்து அதற்கான ஒப்புகைச் சீட்டையும் எண்ண வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கில்தேர்தல் ஆணையம் 2019 தேர்தல் முதல் ஒப்புகைச் சீட்டும் எண்ணப்படும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்தது. ஆனால், நடந்ததோ முற்றிலும் வேறு,. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் ஒப்புகைச் சீட்டு இயந்திரம் வைப்பதையேதேர்தல் ஆணையத்தால் சாத்தியப்படுத்த முடியவில்லை.

வாக்காளர்கள் தாங்கள் அளிக்கும் வாக்கு யாருக்கு பதிவாகியுள்ளது என்பதை அறிந்து கொள்ளும் அடிப்படை உரிமையைக் கூட தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்ய முடியவில்லை.இந்த நிலையில்தான், தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத் மக்களவைத் தொகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த் என்பவர், நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் அது பா.ஜ.க.விற்குத்தான் செல்லும்என்று பகிரங்கமாகச் சொன்னதைக் கேட்டு மனசாட்சி உள்ளவர்கள் அதிர்ந்து போனார்கள்.



ஒட்டுமொத்த ஜனநாயகத்தையும் கேலிக் கூத்தாக்கியது அவரின் இந்தக் கூற்று. இது போன்ற ஆளுங்கட்சியினரின் வார்த்தைகள் உண்மைத்தன்மையற்றவை என்று நிரூபிக்க வேண்டியதேர்தல் அதிகாரிகளின் செயல்பாடுகள் பா.ஜ.க. எம்.பி.யின் செயல்பாடுகளை விட மோசமாக இருந்தன.

பஞ்சாப் மாநிலம் சண்டிகர் மேயர் தேர்தலில், ஆம் ஆத்மி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்குச் சீட்டில் பதிவான வாக்குகளை சேதப்படுத்தி அதை செல்லாத வாக்குகள் என்று சொல்லி பா.ஜ.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவித்தார் தேர்தல் அதிகாரி. சிசிடிவி கேமராவில் பதிவான அந்தக் காட்சிகள் மட்டும் இல்லையென்றால் நடைபெற்ற மிகப்பெரிய ஜனநாயகப் படுகொலை நாட்டு மக்களுக்கு தெரியவராமலேயே போயிருக்கும். இந்த வழக்கு நீதிமன்றத்திற்கு சென்றபோது மாண்பமை நீதிபதிகள் நடைபெற்ற அநீதியைக் கண்டு சீற்றம் கொண்டனர். இத்துனைக்குப் பிறகும் தேர்தல் ஆணையத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை எப்படி பிறக்கும்.



**சண்டிகர் மேயர் தேர்தலில் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரி அனில்**

ஒருபுறம் காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கி வைத்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. மறுபுறம் அமலாக்கத்துறை, உள்ளிட்டவற்றை வைத்து மிரட்டி தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலமாக பல்லாயிரம் கோடியை வாரிச்சுருட்டி பெரும் பண பலத்துடன் தேர்தல் களத்திற்கு வருகிறது பா.ஜ.க.

தேர்தல் ஆணையர் தேர்வு, தேர்தல் தேதி அறிவிப்பு, தேர்தலுக்கு முன்பாக மிரட்டி வசூலித்த பல்லாயிரம் கோடி பணம் என்று அறத்திற்கு புறம்பான அனைத்து ஆயுதங்களையும் கையில் வைத்துக் கொண்டு களமிறங்கும் பா.ஜ.க.தான் இந்த தேர்தலிலும் வெற்றி பெற்று விடுவோம் என்று பகல் கனவு காண்கிறது. ஆனால், மக்கள் ஒரு மிகப்பெரிய அமைதிப் புரட்சிக்கு ஆயத்தமாகி விட்டார்கள். பத்து ஆண்டு கால பாசிச பா.ஜ.க. ஆட்சியில் இந்தியா பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு சீற்றம் கொண்டிருக்கிறது இந்தியச் சமூகம்.அவர்கள் பா.ஜ.க.வை வீழ்த்த தயாராகிவிட்டார்கள்.

இந்தியா கூட்டணியைச் சேர்ந்த தோழர்களாகிய நாம், அயராது பாடுபட்டு ஒற்றுமையோடு உழைத்து, நம் முதலமைச்சரின் திராவிட மாடல்ஆட்சியின் நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லி நாற்பதுக்கு நாற்பதிலும் வெல்வோம். பாசிச பா.ஜ.க. வை வீழ்த்துவோம் ஒன்றுபட்டு நிற்போம் ஒன்றியத்திலும் ஆட்சியை மாற்றுவோம்..

## இராமேஸ்வரம் பகுதியில் கைதான தமிழக

# மீனவர்கள் 21 பேர் யாழ்ப்பாணம் சிறையில் அடைப்பு!

## இலங்கைக் கடற்படைக்குக் கண்டனம்!

*இராமேஸ்வரம், மார்ச் 19 -*

*ராமேஸ்வரத்தில் இருந்து கடலில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள் 21 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். சிறைபிடிக்கப்பட்ட 21 மீனவர்களையும் வரும் 27ம் தேதி வரை காவலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*ராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.*

*இரவில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் ராமேஸ்வரம் மீனவர்களின் இரண்டு விசைப்படகுகளை சிறைபிடித்தனர்.*

*அதில் இருந்த படகு உரிமையாளர் ஆரோக்கிய சுகந்தன், மீனவர்கள் சாமுவேல், அந்தோணி, பூமிநாதன், சுப்பிரமணி, அடிமை யோசுவா, இருளாண்டி, சுந்தரபாண்டி, சீனிப் பாண்டி, பாலுச்சாமி, சக்திவேல் உட்பட 21 மீனவர்களையும் கைது செய்தனர்.*

*இரண்டு படகுகளுடன் மீனவர்கள் அனைவரையும் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு நேற்று முன்தினம் கொண்டு சென்றனர். அங்கு இலங்கைக் கடற்படை உயர் அதிகாரிகள் விசாரணை செய்து யாழ்ப்பாணம் கடல் தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் வசம் ஒப்படைத்தனர்.*

*அவர்கள்விசாரணைக்கு பிறகு, எல்லைதாண்டி மீன் பிடிக்க வந்ததாக வழக்குப் பதிந்து ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிபதி கஜநாதிபாலன், மீனவர்களை வரும் மார்ச் 27ம் தேதி வரை சிறை காவலில் வைக்க உத்தரவிட்டார். அதன்பேரில் போலீசார் 21 மீனவர்களையும் யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.*

*இலங்கை அரசின் இந்நடவடிக்கைக்கு பல்வேறு மீனவர் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், நாயனசெருவு ஊராட்சி, கௌரன் வட்டத்தில் நடைபெற்ற புதிய பகுதி நேர நியாய விலைக்கடையை மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ., பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுண்டி, நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் துணைத் தலைவர் டி.தேவராஜி, ஒன்றிய கவுன்சிலர் ஆனந்தன், ஊராட்சிமன்றத் தலைவர் அஸ்வினிதேசிங்குராஜா, ஊராட்சிமன்ற துணைத் தலைவர் ஜெகதீஸ்வரி சதீஷ்குமார், கோபி, முனிராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.



திருச்செந்தூர் ஆலந்தலையில் ரூ. 49 லட்சத்தில் சாலைப் புதுப்பிக்கும் பணியை மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஆலந்தலை பங்குதந்தை சில்வஸ்டர், நகராட்சி தலைவர் சிவஆனந்தி, துணைத்தலைவர் செங்குழி ரமேஷ், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் ஆறுமுகநயினார், உதவி கோட்டப்பொறியாளர் விஜயசுரேஷ்குமார், உதவி பொறியாளர் சிபின், தி.மு.க. வர்த்தக அணி மாநில இணைச் செயலாளர் உமரிசங்கர், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ராமஜெயம், திருச்செந்தூர் நகர செயலாளர் வாள் சுடலை, நகராட்சி கவுன்சிலர்கள் செல்வி, கிருஷ்ணவேணி, செந்தில்குமார், தினேஷ்கிருஷ்ணா, சுதாகர், ஆலந்தலை வார்டு செயலாளர்கள் லெவி, சுரேஷ், ஊர் நலக்கமிட்டி தலைவர் ஆசைத்தம்பி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் தொகுதியில் - இந்தியா கூட்டணியின்

# மார்க்சிஸ்ட் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வோம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், மார்.19-

தமிழ்நாடு, பாண்டிச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் அனைவரும் கடுமையாக பணியாற்றி வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகத்தின் செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அவைத் தலைவர்கள் காமாட்சி, மோகன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

**கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் இ.பெரியசாமி பேசும்போது குறிப்பிட்டதாவது:-**

தேர்தல் களம் என்பது நாம் அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட்டு வெற்றி தர வேண்டும் என்பதை திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் தோழர் சச்சிதானந்தத்தை வெற்றி பெற செய்ய வேண்டும். வாக்குகளை எண்ணி முடிக்கின்ற வரை தனிப்பட்ட வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு நாம் அனைவரும் வெற்றிக்காக பாடுபட வேண்டும். ஓட்டு எண்ணாமலேயே நமது வேட்பாளர் பெரும் வெற்றி பெற்ற மனநிலை வேண்டும். 84 க்கு பிறகு நாம் எடுத்த நடவடிக்கைகள் மிகவும் நல்லதாக அமைந்தன.

தொடர்ந்து நாம் அமைத்த வியூகத்தின் காரணமாகவும், மக்களின் அன்பை பெற்றதனால் பெரும் வெற்றியை தொடர்ந்து பெற்று வருகிறோம். அந்த வகையில் திண்டுக்கல் தொகுதி வெற்றிதான் இந்தியாவின் முதல் வெற்றியாகும். மாவட்டம் முழுவதும் பரந்து பணியாற்றிய தோழரைத்தான் நமக்கு வேட்பாளராகத் தந்து இருக்கிறார்கள். நகரத்தில் மட்டுமல்லாது திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, கொடைக்கானல் பகுதியில் 1 லட்சம் வாக்குகள் மட்டுமல்லாமல் அனைத்து கிராமங்களிலும் இதே வாக்குகள் கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். தமிழக முதல்வர் அவர்கள் தான் வேட்பாளர் என்ற முறையில் நாம் கடுமையாக உழைத்து பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

**அமைச்சர் அர.சக்கர பாணி பேசும்போது குறிப்பிட்டதாவது,** தமிழ்நாடு முதல்வர் அவர்கள் திண்டுக்கல், மதுரைக்கு இரண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், தமிழக முதல்வர் அவர்கள், கழகத் துணைப்பொதுச் செயலாளர் அவர்கள், இவர்கள் தான் வேட்பாளராக நிற்கிறார்கள் என்று புரிந்து நாம் களத்தில் சிறப்பாக கடுமையாக பணியாற்றிட வேண்டும். அரிவாள், சுத்தியல், நட்சத்திர சின்னத்தை வீடு தோறும் கொண்டு செல்ல வேண்டும்.

அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் நாம் நேரடியாக கொண்டு செல்ல வேண்டும். திண்டுக்கல் மார்க்சிஸ்ட் வேட்பாளர் வெற்றி தான் 40 தொகுதியிலும் முதல் வெற்றி என்பதை கருத்தில் கொண்டு நாம் வெற்றி பெற செய்ய வேண்டும். வேட்பாளர் சச்சிதானந்தம் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் இவ்வாறு அமைச்சர் சக்கரபாணி பேசினார்.

**மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசும்போது குறிப்பிட்டதாவது,** திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கிற தி.மு.க. நிர்வாகிகளை அழைத்து கூட்டம் போட்டது பெருமையாக உள்ளது. இந்தியா கூட்டணியின் வெற்றியை மாபெரும் வெற்றியாக இந்தியாவே திரும்பிப் பார்க்க போகிறது. தமிழக ஆளுநர் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொண்டு இருக்கிறார். உச்சநீதிமன்றமே அமைச்சர் பொன்முடி தண்டனையை நிறுத்தி வைத்த போது ஆளுநர் ஏன் பதவி பிராமணம் செய்ய மறுக்கிறார். மகத்தான வெற்றியை இந்தியா கூட்டணி பெறும். முதல்வர் ஆசியோடு திண்டுக்கல் தொகுதியில் சி.பி.எம். போட்டியிடுகிறது.

தமிழ்நாட்டிலேயே இந்தியாவிலேயே அதிக வாக்குகள் வெற்றி பெற்ற திண்டுக்கல் தொகுதி. தமிழக முதல்வரே சொன்னார் .40 தொகுதிகளிலும் நான் தான் வேட்பாளர் என்று களத்தில் பணியாற்றிட வேண்டும் என்று சொன்னார். தேர்தல் ஆணையம் நமக்கு அவகாசம் அளிக்கவில்லை. வேட்புமனுத் தாக்கல் செய்யும் போது அதிகமானவர்களை திரட்ட வேண்டும் வெற்றி என்பது முதல்வருடைய வெற்றி இந்த வெற்றி திண்டுக்கல் மாவட்டக் கழகத்திற்கும், அமைச்சர்கள் இ. பெரியசாமி, அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் செந்தில்குமாரின் வெற்றியாக நாம் உருவாக்கிட வேண்டும்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசினார்.

கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் உரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், மார்கிரேட் மேரி உட்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர செயலாளர் ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழக செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் பாலபாரதி, கனகராஜ், பாண்டிஉட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இந்திய ஜனநாயகம்;

# ஜனநாயக பாதுகாப்பு அமைப்பின் கணிப்பும்; கவலையும்;

இந்த ஆண்டு 2024, மார்ச் திங்கள் 12ஆம் நாள் இந்து ஆங்கில இதழில் எட்டாம் பக்கத்தில் ஜனநாயகத் தன்மைகள் இந்திய நாட்டில் குறிப்பிடத்தக்க அளவில் தரம் குறைந்திருக்கிறது என சுவீடன் நாட்டில் உள்ள, 2014ஆம் ஆண்டு லிண்ட்பெர்க் என்பவரால் நிறுவப்பட்ட V-Dem (Varieties of Democracy) என்ற நிறுவனம் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் ஜனநாயகத்தின் வகைகள் மற்றும் அரசாங்கத்தின் பண்புகளை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கிறது. இந்தத் திட்டத்தின் செயல் தலைமையகம் சுவீடன் நாட்டின் கோதன்பர்க் பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் அறிவியல் துறையை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம் ஆகும்.

குறிப்பாக இந்த V-dem நிறுவனத்தின் மூலம் உலகில் ஜனநாயக ஆட்சி முறையை பின்பற்றும் நாடுகளின் ஜனநாயக செயல்முறைகளை அளவீடு செய்தல் மற்றும் அது தொடர்பான ஆய்வு கண்ணோட்டத்தையும் முக்கிய நோக்கமாகக் கொண்ட நிறுவனம் ஆகும். இந்த நிறுவனத்தின் சார்பாக 2023 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் இந்தியாவின் ஜனநாயக முறையில் ஆட்சி அமைப்பு என்பது செயல்பாட்டில் உருமாறி, தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியாக தலைகீழ் பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது என அந்த நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. (India, which was down - graded to the status of an "electoral autocracy" in 2018, has declined even further on multiple metrics to emerge as "one of the worst autocratisers" according to the "Democracy Report 2024" released by the Gothenburg - based VDem Institute.)

இங்கு பேச்சுரிமை, நேர்மையானதேர்தல், சங்கங்கள் அமைத்து உரிமைகள் கோருவதற்கான வாய்ப்பு மற்றும் தன்னார்வக் குழுக்கள் ஆகிய ஜனநாயகத்தின் அடிப்படை கட்டமைப்புக்கள் இத்தகைய நாடுகளில் உருக்குலைக்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமைகளையெல்லாம் ஜனநாயகத்தில் அனுபவித்துக் கொண்டிருந்த இந்திய நாட்டின் குடிமக்கள் தற்பொழுது 1975 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரகடனப்படுத்திய அவசரகால நிலைமை பிரகடனத்தின் பொழுது எந்த அளவிற்கு குடிமக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதோ, அந்த அளவிற்கு இன்று ஜனநாயகம் என்ற பெயரில் உரிமைகள் மறுக்கப்படுவதும், உருக்குழைக்கப்படுவதுமான நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர் -
உயர்மட்ட கழக
செயல்திட்டக்குழு உறுப்பினர்



இந்திய நாட்டின் பிரதம அமைச்சர் நரேந்திர மோடி அவர்களால் மத உரிமைகள் மறுக்கப்படுவதோடு, எதிர்க்கட்சி தலைவர்களையும், அரசின் கொள்கைகளை விமர்சிப்பவர் களையும், அரசியல் சிந்தனையாளர்களையும் கடும் துன்பத்திற்கு உள்ளாக்குகிறது.("The Modi-led government also continuous to suppress the freedom of religion rights. Intimidation of political opponents and people protesting government policies, and silencing of dissent in academia are now prevalent")

பிரதமர் மோடியினுடைய ஆட்சி மூன்றாவது முறையாக தொடருமானால், ஏற்கனவே சிதைந்து கிடக்கும் ஜனநாயக மாண்புகளும், மரபுகளும் நேர் செய்யப்படாமலேயே தொடரும். மேலும் சிறுபான்மையினருடைய உரிமைகளும், பொதுசமூக உரிமைகளும் பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை என சுவீடன் நாட்டினுடைய ஆய்வு நிறுவனம், இந்தியாவில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சியின் முழுமையான படபிடிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்விற்கு 180 நாடுகளைச் சேர்ந்த 4200 அறிஞர்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். 202 நாடுகளை ஆய்வுக்கு உட்படுத்தி இருக்கிறார்கள். இந்த ஆய்வு நிறுவனம் நடுநிலையானது என்பதிலும், ஜனநாயகத்தின் மாண்புகளையும், மரபுகளையும் தொடர்ந்து கட்டிக் காக்கப்பட வேண்டும் என்ற மைய நோக்கத்தில், ஆழ்ந்த அக்கறையும் கொண்ட நிறுவனமாகும் என்பதில் ஐயப்பாட்டிற்கு அவசியமில்லை. எனவே, மூன்றாவது முறையாக பிரதமர் மோடியின் ஆட்சி தொடருமானால் "தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் விசித்திரமான சர்வாதிகாரம் உருவாகும்". இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கி, அதனை ஏற்றுக்கொண்டு 1950 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் தேதி முதல் அமல்படுத்தி, ஏறத்தாழ 75 ஆண்டு காலம் வெற்றி கண்ட இந்திய குடிமக்கள், நாட்டின் ஜனநாயகத்தை இந்திய அரசியல் சட்டத்தின் வழி நின்று காப்பாற்றிட அனைத்து மக்களும் தன்னெழுச்சியாக அணி திரள வேண்டிய காலம் விரைவாகவே உருவாகிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாகத் தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் அதிகாரியாக ராஜீகுமார் மட்டும் செயல்பட்டு வந்த சூழ்நிலையில் மற்ற தேவைப்படும் இரண்டு தேர்தல் ஆணையாளர்களாக தேர்ந்தெடுப்பதற்கு குழு அமைக்கப்பட்டு, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இல்லத்தில் நடந்த குழுக்கூட்டத்தில் பிரதமர், உள்துறை அமைச்சர் அமித்ஷா, மக்களவை காங்கிரஸ் கட்சித்தலைவர் ஆதிர் ரஞ்சன்சவித்திரி ஆகியோர் கலந்துகொண்டு, சுக்வீர்சிங்சந்து, ஞானேஷ்குமார் ஆகியவர்களை தேர்தல் ஆணையாளர்களாக தேர்வு செய்துள்ளனர். தேர்வுக்குழு அமைத்த முறையின் மூலம், ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் முடிவே வெற்றி பெறும் என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமில்லை.

இந்திய தேர்தல் ஆணையம் என்பது நாடு முழுவதும், நாடாளுமன்றத்தேர்தலை நடுநிலைதவறாமல் நடத்தி வைக்கும் சிறப்பு அதிகாரத்தை இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கிறது. இவ்வளவு பொறுப்புள்ள ஜனநாயக கடமையை நிறைவு செய்ய வேண்டிய தேர்தல் ஆணையாளர்கள் நியமனத்தில், உச்ச நீதி மன்றத்தின் பங்கினை ஒன்றிய பா.ஜ.க. அரசு தவிர்த்ததற்கு என்ன காரணம் என்பதற்கு இதுவரையில், ஒன்றிய அரசு விளக்கமளிக்கவில்லை என்பது மக்களின் ஐயப்பாட்டிற்கு இடமளிக்கிறது. இத்தகைய அரசியல் சூழ்நிலையில் 16.03.2024ஆம் தேதி தேர்தல் அட்டவணை 16.03.2024ஆம் நாள் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகளும் இந்திய தேர்தல் ஆணையத்தால் அமல்படுத்தப்பட்டுள்ளது. அந்த தேர்தல் அட்டவணைப்படி இந்திய நாட்டில் 7 கட்டங்களாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. 97 கோடி வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க உள்ளார்கள். முதல் கட்டமாக நடைபெற உள்ள தேர்தலில் தமிழ்நாடு - பாண்டிச்சேரி நாடாளுமன்றத் தேர்தல்கள் ஒரே தேதியில் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற வுள்ளது. ஆனால் வாக்கு எண்ணிக்கையும் - முடிவுகள் வெளியாகும் பணிகள் ஜீன் மாதம் 4ஆம் தேதி தான் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் தேர்தல் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற்ற பின்னர் ஜீன் மாதம் 4ஆம் தேதி, 46 நாட்கள் இடைவெளிக்கு பின்னர் வாக்கு எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளது. முதல் கட்ட தேர்தல் 21 மாநிலங்களில் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து மற்ற மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் ஜீன் மாதம் 1ஆம் தேதி வரை நடைபெற்று வாக்களிக்கும் பணி முடிவடைகிறது. இந்த தேர்தல் அட்டவணையையும் பிரதம அமைச்சர் நரேந்திர மோடி அவர்கள் மேற்கொண்ட தமிழ்நாடு தழுவிய பிரச்சார நிகழ்ச்சிகளையும் ஆழ்ந்து பரிசீலித்தால் பிரதம அமைச்சருக்கு முன்கூட்டியே தெரிந்திருக்க கூடும் என அனுமானிக்க முடிகிறது. அது மட்டுமல்லஅவருடையதேர்தல்சுற்றுப்பயணங்களுக்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது எனவும் கருத இடமளிக்கிறது. '

இதற்கிடையில் தேர்தல் பத்திரங்கள் மூலம் 6 ஆயிரம் கோடிக்கும் மேல் பாரதிய ஜனதாக் கட்சி பெற்றிருக்கிறது என்பதை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகள் ஒன்றிய அரசின் அங்கங்களான வருமானவரித்துறை, வருமான வரி அமலாக்கத்துறை ஆகிய அமைப்புகளின் அழுத்தங்கள் காரணமாக இவ்வளவு பெரிய தொகைக்கான தேர்தல் பத்திரங்களை பாரதிய ஜனதாக் கட்சி அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி பெற்றிருக்கிறது என்ற விமர்சனத்தை எளிதில் புறம் தள்ளி விடமுடியாது. பாரதிய ஜனதாக் கட்சி எந்த அளவிற்கு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருக்கிறது என்பதை வாக்காளர் பெருமக்கள் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். அதுமட்டுமல்ல பாரதிய ஜனதாக் கட்சிக்கோ, அந்த கட்சியை சார்ந்த பிரதம அமைச்சர் நரேந்திர மோடி அவர்களுக்கோ "இந்தியா"(INDIA) கூட்டணி கட்சியை சார்ந்த அரசியல் கட்சிகள் மீது குற்றம் சாட்டுவதற்கான கறைபடிந்த கரங்களைவுடைய, பாரதிய ஜனதாக் கட்சிக்கு இல்லை என்று உறுதிபடக்கூறலாம். இத்தகைய நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய இந்த நாடாளுமன்ற தேர்தலில் நீதிபதிகளாக செயல்பட்டு, ஜனநாயக கட்டமைப்பையும், இந்திய அரசியல் சட்டத்தையும் சிதைவின்றி காப்பாற்றிட வேண்டும். ஜனநாயகத்தில் மக்கள் தான் மகேஸ்வரர்கள் என்ற முழக்கத்தோடு "இந்தியா" (INDIA) கூட்டணியின் தமிழ்நாட்டின் வழிகாட்டும் தலைவரான தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் பிதாமகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்க வாக்காளர் பெருமக்களே வாருங்கள், அவர் பின்னே அணிவகுப்போம், இதோ ஸ்டாலின் அழைக்கிறார் விரைந்து வாரீர், வெற்றி காண்போம்....

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.என்.செல்வராஜ்

மார்ச் 19 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் கொட்டையூர் பகுதியில் இருபது ஆண்டுகள் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நகர்மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

குடந்தை வாணி விலாச சபா செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மக்களவைத் தேர்தலை முன்னிட்டு - வருமான வரித்துறையின்

# 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறப்பு!

சென்னை,மார்ச்.19-

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு வருமான வரித்துறையால் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. தனி நபரோ, கட்சியோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ பணம், இலவச பொருள் விநியோகித்தால் புகார் தெரிவிக்கலாம். தகவல்களை வருமான வரி அலுவலகத்தில் உள்ள கட்டணமில்லா தொலைபேசி எண், மின்னஞ்சல், வாட்ஸ் ஆப் மூலம் தெரிவிக்கலாம். கட்டணமில்லா எண் 1800 425 6669, மின்னஞ்சல் tn.electioncomplaints2024@incometax.gov.in புகார் தெரிவிக்கலாம். 94453 94453 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிலும் புகார்களை தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிவகங்கை நகர் 5வது வார்டு.அ.தி.மு.க. மூத்த தீவிர உறுப்பினர் கென்னடி அக்கட்சியில் இருந்து விலகி சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார். உடன் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் ஜெயகுமார், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், ராம்தாஸ் ஆகியோர் இருந்தனர்.

# மும்பை - சிவாஜி பூங்காவில், ராகுல் காந்தியின் - ‘இந்திய ஒற்றுமை நியாயப் பயண’ நிறைவு விழாவின் எழுச்சிமிகு காட்சிகள்!













### தேர்தல் பத்திரங்கள் மூலம்

# பா.ஜ.க. பெற்ற தொகை ரூ.8,250 கோடி!

## தேர்தல் ஆணைய இணையதளத்தில் தகவல்!

புதுடெல்லி, மார்ச் 19–

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான புதிய ஆவணங்களை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் தனது இணையதளத்தில் வெளியிட்டது.

இதன்படி, தேர்தல் பத்திரங்கள் மூலம் ரூ.8,250 கோடியை ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ. வசூலித்துள்ளது அம்பலமாகியுள்ளது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கும் திட்டத்தை ஒன்றிய பா.ஜ. அரசு கடந்த 2018ல் அறிமுகம் செய்தது. கருப்பு பணத்தை ஒழிக்க உதவும் என்று குறிப்பிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், ஒரு கட்சிக்கு யார், யார்? நிதி கொடுத்தார்கள் என்ற விவரம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

ஆளும் பா.ஜ. பெரிய தொழில் நிறுவனங்களை மிரட்டி தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி வசூலிப்பதாக புகார்கள் எழுந்தன. இதனால் தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற அரசியல் சாசன பெஞ்ச் கடந்த மாதம் 15ம் தேதி தீர்ப்பளித்தது.

அப்போது, தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்ததோடு, இதுவரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நிதி குறித்த முழு விவரத்தையும் மார்ச் 6ம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க எஸ்.பி.ஐ. வங்கிக்கு உத்தரவிட்டது.

ஆனால், பல தரவுகளை சேகரிக்க வேண்டி இருப்பதால் ஜூன் மாதம் வரை கால அவகாசம் கேட்டு உச்சநீதிமன்றத்தில் எஸ்.பி.ஐ. மீண்டும் முறையிட்டது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த உச்ச நீதிமன்றம், கடந்த 12ம் தேதி தன்னிடம் உள்ள தரவுகளை தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. வழங்கவேண்டும். 15ம் தேதிக்குள் அந்த விவரங்கள் தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து, எஸ்.பி.ஐ. வழங்கிய 763 பக்க ஆவண தரவுகளை தேர்தல் ஆணையம் கடந்த 13ம் தேதி இணைய தளத்தில் வெளியிட்டது. இதில், கம்பெனிகள் தேர்தல் பத்திரங்கள் வாங்கிய தேதி, தொகை பற்றிய விவரம் தனியாகவும், அரசியல் கட்சிகள் அதை வங்கியில் சமர்ப்பித்த தேதி, தொகை விவரம் தனியாகவும் இருந்தது. எந்த கட்சிக்கு எந்த கம்பெனி நிதி கொடுத்தது என்பதை கண்டுபிடிப்பதை தடுக்க தேர்தல் பத்திரத்தின் எண் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.

கடந்த 2019 ஏப்ரல் 12ம் தேதி முதல் தீர்ப்பு வெளியான கடந்த பிப்ரவரி 15ம் தேதி வரையில் விற்ற தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்கள் அதில் இடம் பெற்றிருந்தன. அதன்படி, மொத்தம் ரூ.6,060 கோடி மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை பா.ஜ. பெற்றிருந்தது தெரியவந்தது.

இந்த வழக்கு கடந்த நவம்பர் மாதம் 2ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, கடந்த செப்டம்பர் 30ம்தேதி வரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நிதி விவரத்தை அவர்களிடம் இருந்து பெற்று தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

**வசூலான தொகையில் 50% பா.ஜ.க.வுக்கு வந்துள்ளது!**

அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் குறித்த அனுப்பிய தபால்களை சீல் உடைக்காமல் உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தாக்கல் செய்தது. இந்த தபால்களை உச்சநீதிமன்ற பதிவுத் துறை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்தது. அதில் இருந்த விவரங்களை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்தது.

நூற்றுக்கணக்கான பக்கங்களை கொண்ட இந்த ஆவணங்களில் ஒவ்வொரு கட்சியும் அளித்த விவரங்கள் இருந்தன. இதன்படி ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.வுக்கு அதிகபட்சமாக ரூ. 6,986 கோடி வசூலித்திருந்தது. இதில், ரூ.2,190 கோடி திட்டம் துவங்கிய 2018 மார்ச் முதல் 2019 ஏப்ரல் 11ம் தேதி வரை வசூலாகியிருந்தது. அதே நேரத்தில் ஏற்கனவே உள்ள தரவுகளின்படி 2019 ஏப்ரல் 12ம் தேதி முதல் திட்டம் ரத்து செய்யப்பட்ட தேதி வரை பா.ஜ.வுக்கு ரூ.6,060 கோடி வசூலாகியிருந்தது.

இதன்படி, தேர்தல் பத்திரங்கள் மூலம் மொத்தம் ரூ.8,250 கோடியை பா.ஜ. மட்டும் வசூலித்தது அம்பலமாகி உள்ளது. தேர்தல் பத்திரங்கள் மூலம் வசூலான மொத்தம் ரூ.16,518 கோடியில் சுமார் 50 சதவீதம் பா.ஜ.வுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### சட்டத்துறை அமைச்சரை போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புபடுத்தி பேசிய

# அ.தி.மு.க. பிரமுகர் மீது நடவடிக்கை எடுத்திடுவீர்!

## காவல் நிலையத்தில் க.ராஜேந்திரன் புகார் மனு!

*புதுக்கோட்டை, மார்ச் 19 -*

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தி.மு.க. அரசைக் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் அறந்தாங்கியில் மனிதச் சங்கிலி போராட்டம் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் வைரமுத்து தலைமையில் அறந்தாங்கி நகரச் செயலாளர் ஆதி மோகனக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

மனிதச் சங்கிலியில் கலந்து கொண்ட அறந்தாங்கி நகர்மன்ற முன்னாள் கவுன்சிலர் மண்டலமுத்து பேசும்போது, அறந்தாங்கி அருகே சமீபத்தில் பிடிபட்ட 110 கோடி ரூபாய் மதிப்புள்ள போதை பொருள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சருக்கு தொடர்பு உள்ளது என்று பேசினார்.

மண்டலமுத்து பேசிய பேச்சு சமூக வலைத்தளங்களில் பரவியது. இதைப் பார்த்த தி.மு.க.வினர் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனே அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதி ராஜன், அறந்தாங்கி நகர் மன்ற துணைத் தலைவர் தி.முத்து முன்னிலையில் நகர தி.மு.க., அறந்தாங்கி தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி, நகர சபை துணைத்தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் அமைச்சர் குறித்து அவதூறாக பேசிய அ.தி.மு.க. பிரமுகர் மண்டலமுத்து மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அறந்தாங்கி போலீஸ் இன்ஸ்பெக்டர் கருணாகரனிடம் மனு கொடுத்தனர்.

நிகழ்வில் முன்னாள் நகர்மன்றத் தலைவர் மாரியப்பன், அறந்தாங்கி தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்வேலன், விவேக் ராஜா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் வினோதன், கார்த்தி, வீரசிவம்,

மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி ஒருங்கிணைப்பாளர் சக்திவேல், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அன்பழகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அடைக்கலராஜா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் கருணாகரன், நகர துணைச் செயலாளர் ராமசாமி, நகர பொருளாளர் அனந்தராமன், மாவட்டப் பிரதிநிதி கார்த்திகேயன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் ஆறுமுகம், கைலாசம், சமூக வலைதள தன்னார்வலர் பழனிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில் ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் நாடாளுமன்ற தேர்தல் பணியை விரைவுப்படுத்தும் விதமாக “இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்” வழியாக அனைத்து வீடுகளுக்கும் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்குகள் சேகரிக்க வேண்டும் என்று கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரத்தினம், மாவட்டப் பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் பூதலிங்கம் பிள்ளை, கரோலின் ஆலிவர்தாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் என்.தாமரை பாரதி, ரா.பார்த்தசாரதி, ஆர்.சதாசிவம், மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி, அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க இதழ்கள் - முகில்



எட்டாம் வகுப்பு படிக்கும் போதே, கல்லக்குடிப் போராட்டத்தில் பங்கேற்று தண்டவாளத்தில் அமர்ந்தவர், புலவர் பெ.அ.இளஞ்செழியன். கரந்தை புலவர் கல்லூரியில் பயின்ற இவர், பின்னர், சில காலம் தமிழாசிரியராக இருந்தார். அவரால் தொடங்கப்பட்ட இதழ், ‘முகில்’.

அந்த இதழை 1968-ஆம் ஆண்டு தொடங்கினார். அதற்கு அவர்தான் ஆசிரியராகவும் இருந்தார். இலக்கிய இதழாக மலர்ந்த அது, மாத இதழாக திருச்சியிலிருந்து வெளிவந்தது. அதன் தொடக்க இதழை இனமானப் பேராசிரியர் அவர்கள் வெளியிட்டார்.


பிறகு 1974 முதல் 1987 வரை அந்த இதழை, சென்னையிலிருந்து நடத்தினார். அந்த இதழ் பெரும்பாலும், அட்டையில் திராவிட இயக்கத் தலைவர்களின் படங்களைத் தாங்கி வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது, அடுத்து வந்த இதழின் அட்டை, கருப்பு வெள்ளையில் வெளியானது. அட்டையில் அண்ணாவின் படம் போட்டு, அதன் கீழே இரங்கல் கவிதை அச்சிடப்பட்டிருந்தது.

## முதலில் முதலில் 3

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**







# மாநாடும் மாதரும்!

திராவிட இயக்க மாநாடுகளில் கொடி ஏற்றுதலும், மாநாட்டைத் திறந்து வைப்பதும் மிக முக்கியமான நடைமுறைகள். சமீபத்தில், நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில், கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி அவர்கள் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார்.

மகளிர் அமைப்புகள் நடத்தும் மாநாடுகளில் மகளிர் கொடி ஏற்றி வைப்பது பெரிய விஷயமில்லை. ஆனால், இளைஞர் அணி மாநாடு போன்ற பொதுவான ஒரு மாநாட்டில் பெண் தலைவர் ஒருவரை முன்னிறுத்துவது என்பது இதர கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் புதிய விஷயமாகவும், பெரிய விஷயமாகவும் இருக்கும். திராவிட இயக்கத்துக்கோ அது இயல்பிலேயே வளர்ந்த ஒரு மரபணு!

ஆம்... 1931 நவம்பர் 29 அன்று சென்னையில் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அதில் மாநாட்டுத் திறப்பாளராக திராவிட இயக்கப் போராளி எஸ்.குஞ்சிதம் அவர்கள் முன்னிறுத்தப்பட்டார். அதேபோல 1944-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற சென்னை சுயமரியாதை மாநாட்டில் கனகம்மை அவர்கள் மாநாட்டுத் திறப்பாளராக இருந்தார். போலவே 1945-ஆம் ஆண்டு டிசம்பர் 9 அன்று நடைபெற்ற வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழக முதல் மாநாட்டை ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், 1945- ஆம் ஆண்டு செப்டம்பர் 29 திருச்சியில் நீதிக்கட்சியின் 17-வது மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் நீதிக்கட்சியின் தராசுக் கொடியை ஏற்றிவைத்தவர் மிராண்டா கஜேந்திரன் அவர்கள்.

**மாநில அளவிலான மாநாடுகள் மட்டுமல்லாது, மண்டல அளவிலான மாநாடுகளிலும் பெண் தலைவர்களே கொடியேற்றுவது மரபு.**

1944 -ஆம் ஆண்டு நீதிக்கட்சி, ’திராவிடர் கழகம்’ என்று பெயர் மாற்றம் கண்டது. அதற்குப் பிறகும் நீதிக்கட்சியின் தராசுக் கொடியே திராவிடர் கழகத்தின் கொடியாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததை எதிர்த்து முதல் குரல் கொடுத்தவரும் அதே மிராண்டா கஜேந்திரன் அவர்கள்தான். 1944- ஆம் ஆண்டு, சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் அவர் அந்தக் கருத்தை முன் வைத்தார். இறுதியாக, 1945-ஆம் ஆண்டு மாநாட்டில் அந்தக் கொடி, அவரால் கடைசி முறையாக ஏற்றப்பட்டது. பிறகு, திராவிடர் கழகத்துக்குப் புதிய கொடி பிறந்தது.

மாநில அளவிலான மாநாடுகள் மட்டுமல்லாது, மண்டல அளவிலான மாநாடுகளிலும் பெண் தலைவர்களே கொடியேற்றுவது மரபு. அப்படிக் கடந்த காலங்களில் கழகத்தின் பெண் நிர்வாகிகள் கொடியேற்றியதற்கான வரலாற்றுச் சாட்சியங்கள் இங்கே படங்களாக...!

,,,அடையாளம் அறிவோம்.

## ஃப்ளாஷ்பேக்





இரா.காபிரியேல்

### வருகையும் சந்திப்பும்!

2012-ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்துக்கு வருகை தந்த இன்றைய கழகத் தலைவர் அவர்களை நான் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் இது. அன்று நான் சாத்தூர் கிழக்கு ஒன்றிய ஆதி திராவிடர் நலக்குழுவின் துணை அமைப்பாளராக, கழகப் பணியாற்றினேன். அதன் பிறகு சாத்தூர் ஒன்றிய பிரதிநிதியாகவும் தற்போது சாத்தூர் கிழக்கு ஒன்றிய மாணவர் அணித் துணை அமைப்பாளராகவும் சமத்துவபுரம் கிளைக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றுகிறேன்.

**-இரா.காபிரியேல், கிளைக் கழகச் செயலாளர், விருதுநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அஞ்சல் தலையில் தமிழ்!

1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி அண்ணாவின் நினைவு நாளையொட்டி சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ‘அண்ணா அஞ்சல் தலை’ வெளியீட்டு விழா நடைபெற்றது. அந்த அஞ்சல் தலைக்காக ஒன்றிய அரசு அண்ணாவின் படத்தைக் கேட்டிருந்தது. அண்ணாதுரை என்ற கையெழுத்தோடு இருக்கும் படத்தை அனுப்பி வைத்தார் கலைஞர். அண்ணாவின் அஞ்சல் தலையில் தமிழும் இடம் பெற்றது.

## பாசறை படிப்பறை 3

**கௌதம் ராஜ்**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# ‘ஞாலம்’ கருதியவர்!

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்து, அந்த நூற்றாண்டு இறுதி வரை நிறை வாழ்வு வாழ்ந்தவர், அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயகர். மெட்ராஸ் மாகாணத்தில் 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற சமூக-அரசியல்-பொருளாதார மாற்றங்களை இவரது வாழ்க்கையைக் கொண்டு மதிப்பிடலாம்.

விளிம்புநிலை மக்களின் நில உரிமைக்காகவும், தமிழ்ச் சமூகத்தைப் பீடித்திருந்த மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பவும் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை முதலீடு செய்த அத்திப்பாக்கம் வேங்கடாசலனாரைப் பற்றிய நாவல்தான் எழுத்தாளர் தமிழ்மகன் எழுதிய ‘ஞாலம்’. புனைவு என்று சொல்லப்பட்டாலும், பல அத்தியாயங்களில் நேரடி வரலாற்றைச் சொல்வதன் மூலம் அல்புனைவுத் தன்மையினையே இந்நூல் கொண்டிருக்கிறது.



சென்னையின் முதல் ரயில் அவரது வீட்டுக்கு அருகிலிருந்து தொடங்குகிறது. பக்கிங்காம் கால்வாய், நீதிமன்றம், துறைமுகம், அச்சகம், கொத்தவால் சாவடி சந்தை எனப் பெரும்பாலான கட்டமைப்புகளுக்கு அவரது வீடே மையமாக இருந்துள்ளது.

‘கண்மூடி வழக்கம் எல்லாம் மண் மூடிப் போக’ என்று சமரச சுத்த சன்மார்க்க சங்கம் கண்ட இராமலிங்க அடிகள் வேங்கடாசலனாரின் பக்கத்துத் தெருவில் வசித்தவர். மிஷனரி பள்ளியில் ஆசிரியராக இருந்து, சுண்ணாம்புத் தொழிலில் இறங்கி சமூகத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் வேங்கடாசலனார்.

1860-களில் நிலம் பறிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் நில உரிமைக்காக ‘பாயக்காரிகளுக்கும் மிராசுதார்களுக்கும் உண்டாயிருக்கிற விவாதம்’ என்ற நூலையும், இந்து மதத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ‘இந்து மத ஆசார ஆபாச தரிசினி’ என்ற நூலையும் எழுதினார் வேங்கடாசலனார். இதைத் தொடர்ந்து ‘சென்னை இலௌகீக சங்கம்’ தொடங்கப்படுகிறது, ‘தத்துவவிவேசினி’ என்ற தமிழ் இதழும், ‘தி திங்கர்’ என்ற ஆங்கில இதழும் பல்வேறு பகுத்தறிவு-அறிவியல் கருத்துகளைக் கொண்டு வெளிவருகின்றன.

**சாதி-மதப் பிற்போக்குத் தனங்கள் நிறைந்திருந்த தமிழ்ச் சமூகத்தின் 19-ஆம் நூற்றாண்டை இந்நூல் நம் கண் முன் நிறுத்துகிறது.**


விளிம்பு நிலை மக்களின் நில உரிமைக்காக வேங்கடாசலனார் மேற்கொண்ட மெனக்கெடல்கள் இந்நூலின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளன. வரலாற்றுக் குறிப்புக்கள் அத்தனையும் சான்றோடு அத்தியாயத்தின் முடிவில் அடிக்குறிப்பாக இடம்பெற்றுள்ளன. இடையிடையே அவரது குடும்ப வாழ்க்கை எப்படியாக இருந்தது என்பதை விவரிக்கும் பகுதிகளும் புனைவாக வந்து செல்கின்றன. காலனிய அதிகாரிகளிடம் நில உரிமை சார்ந்த கோரிக்கைகளைத் தொடர்ச்சியாக எழுப்பி வந்ததையும், இறுதியாக இவரது முயற்சிகளுக்குப் பலனளிக்கும் வகையில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டதையும் இறுதி அத்தியாயம் நமக்களிக்கிறது.

ஞாலம் என்ற சொல்லுக்கு உலகம், உயர்ந்தோர் என்ற இருவேறு பொருட்கள் உள்ளன. அந்த வகையில், அத்திப்பாக்கம் வேங்கடாசலனார் என்ற மாமனிதரின் கதையையும், நிலத்தைத் தங்களது உலகம் என்று நினைத்து உழைத்துத் தேய்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலையும் இந்நூல் மிகச் சிறப்பாக நமக்குக் கடத்துகிறது. 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற நில உரிமைப் போராட்டத்தை வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டு சுவாரசியம் குறையாமல் கதையாக்கும் இந்நூல் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

,,,வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 422

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131